தென்மொழி

உண்மை உழைப்பு!

ஊருக்கு நல்லன செய்யும் — ஓர்
உண்மை உழைப்பின னாக,
நேருக்கு நேர்நின்று பேசும் — ஒரு
நேர்மை உளத்தின னாக,
யாருக்கும் அஞ்சுதல் இன்றி — ஒரு
யானை வலிமையி னோடு,
போருக்கென வந்து விட்டேன் — என்
போக்கில் மறுதலை இல்லை!

தேருக்கோர் அச்சாணி யாகத் — தமிழ்த்
தெளிவினைக் காப்பதென் கொள்கை!
வேருக்குள் நீர்விடும் வேலை, — நான்
விரும்பும் இனநலத் தொண்டு!
பேருக்கும் பொருளுக்கும் மாயேன் — எந்தப்
பேயர்க்கும் நாயர்க்கும் சாயேன்!
பாருக்குள் உலாதரும் வேளை — என்
பணிக்குச் சடைவுகள் இல்லை!

சுவடி : 20
ஓலை : 9-10

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0: 1008 : திறம்பல் படைத்த அரும்பெரும் அறிஞர், 'நா'வலம் செறிந்த பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். அறியாமையிலும் அடிமைத் தூக்கத்திலும் அழுந்திக்கிடக்கும் தமிழர்களை நாம் மன்னித்துவிடலாம். தக்கமுறையில் அறிவு கொளுத்தினால் விழித்துக் கொள்வார்கள். ஆனால் இந்த எட்டப்பத் தமிழர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது? ஊருணி குளத்தினில் நஞ்சிடும் நீள்பழிகாரர்களை நடுத்தெருவில் நிறுத்திச் சுட்டாலும் தவறில்லை.

கோவையில் வதியும் தி. மு. கழக முன்னணிப் பேச்சாளர் ஒருவர், விடுதலையை விரும்புவதாகப் புனைபெயர் கொண்டவர். அவரோடு எனக்கு ஓராண்டுப் பழக்கம் உண்டு. (ஆனால் நான் தென்மொழிக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவன் என்பது அவருக்குத் தெரியாது.) தங்களைப் பற்றி ஓரிருமுறை என்னிடமும் பேசியிருக்கிறார். அவரின் பேச்சிலிருந்து புலப்பட்டது இதுதான்: தி மு. கழகத்தாருக்குத் தங்களைப் பிடிக்காது என்பதற்காகவே பாவாணரைக் கலைஞர் அரசு தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று ஒருமுறை எடுத்துக்காட்டினேன். அதற்கு அவர் சரியான மறுமொழி தரவில்லை. மழுப்பிவிட்டார். அவர், தம் அணுக்க அடிப்பொடித் தொண்டர் ஒருவரிடம் மிக அண்மையில் இரண்டு செய்திகளைத் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

தாங்கள் தமிழை விற்றுக் காசாக்குகிறீர்களாம். இது முதல் செய்தி. இரண்டாவது செய்தியை எழுதவே கை கூசுகிறது. தங்கள் மகளை ....க்கு விட்டுக்கொடுத்துத் தென்மொழி ஏட்டை நடத்தப் பணஉதவி பெற்றுவந்தீர்களாம். இவ்விரண்டு செய்திகளுக்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன என்றுவேறு அந்தக் கழகப் பேச்சாளர் சொன்னாராம். அணுக்க அடிப்பொடித் தொண்டர் என்னிடம் நேரில் தெரிவித்த செய்திகள் இவை.

இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. தங்கள்மேல் காழ்ப்புக்கொண்ட எட்டப்பத்தமிழர் தி மு. கழகத்தாரிடையே தங்கள் மதிப்பைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இப்படிப் பொய்ச்செய்திகளைப் பரப்பியாவது தமது நமைச்சலைத் தீர்த்துக் கொள்கிறார்போலும். ஆனால் ஒன்று. 'குருவி முட்டிக் குன்று வீழுமா?' காலம் வரும். எரிந்து புழுங்கும் எட்டப்பர்களும், காழ்ப்பேறித் திரியும் காட்டிக் கொடுப்பான்களும் தக்க பாடம் பெறுவர். தங்களின் உண்மை உழைப்பை உலகம் உணரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்றுகூறி மடலைமுடிக்கின்றேன்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

அன்புடன்,
— வள்ளிகேள்வன், திருப்பூர்

0: 1009 : அன்புள்ள பாவலரேறு ஐயா அவர்களுக்கு. வணக்கம். நான் தென்மொழி வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் உரு. 200/- அனுப்பியுள்ளேன். தாங்கள் தென்மொழி தொடங்கிய 1959-ஆம் ஆண்டுமுதல் தென்மொழியைத் தொடர்ந்து

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையிலின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடு பட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன் தென்மொழி நா. இளமாறன்.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:20] உ௦கரு விடை, இரட்டை-சூன் சூலை-ஆக84' [ஓலை.9-10

அருளியின் சொல்லாராய்ச்சி ஒன்றே தமிழை மீட்கும் அருந்திறன்கொண்டது:3

('இவை தமிழல்ல' நூலின் மதிப்புரை)

இவ்வருத்தம் பாவாணரின் மறைவின் பொழுது தோன்றிப் பெரும் ஆலமரமென வளர்ந்து என் உள்ளத்தை அடைத்துக் கொண்டு நின்றது. அதியமான் நெடு மானஞ்சி மறைந்தபோது ஔவையார் பாடிய,

'ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநருமில்லை;
பாடுநருக் கொன்று ஈகுநரு மில்லை' !(புறம் 235)

— என்னும் பாடலடிகள் என் உணர்வில் கொப்பளித்து என் நெஞ்சை அளாவி அழுத்தின.

இக்காலச் சூழ்லோ மிகவும் கொடுமை வாய்ந்தது! ஆட்சியினரோ, அறிஞர்களோ தமிழின் உண்மைப் பெருமையை உணர முடியாதவர்களாயும், அதன் மேம்பாட்டிற்கு உண்மையாய் உழைக்கும் அறிவார்ந்த தூயதமிழ் உள்ளங்களை அறிய இயலாதவர்களாயும், அறிந்து கொண்ட சிலரும் ஆதரவு தரமுடியாதவர்களாகவும் இருக்கின்ற நிலையை நெஞ்சு புண்ணாக நினைந்து நினைந்து உளம் மருகிக்கிடந்தேன். இத்தகைய வருத்தத்தைப் பாவாணரும் உணர்ந்திருந்தார். அவரின் கீழ்க்காணும் உரைகள் இவ்வுண்மையை உணர்த்தும்.

'தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் உண்மையை உலகறிய நாட்டுவேன்!

'ஆயின், அறிவியல் முறைப்படி தமிழை ஆய்ந்து வளர்ப்பவர் பிழைப்பின்றிச் சாகவும், தமிழைக் காட்டிக் கொடுப்பவர் மேமேலுயர்ந்து வாழவுமே இற்றைத் தமிழ்நாட்டு நிலைமையுள்ளது'

'இந்நிலைமையே நீடின், இனித் தமிழுமில்லை! தமிழாராய்ச்சியுமில்லை. எல்லா மொழியும் கலந்த கொடுங் கொச்சை மொழிதான் தமிழ் என்று வழங்கும்.

'தமிழுக்கு ஒரு நன்மையும் செய்யாதவர் தெருத் தெருவாக விலைக்கு வாங்கவும், தமிழுக்கே தம் வாழ்வினைத் தத்தம் செய்தவர் ஏன் குடியிருக்க வாடகை வீடு தேடித் தெரு தெருவாய் அலைய வேண்டும்?'

— 'தமிழர் வரலாறு' பக். 346-347

தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்கு உழைப்பது என்பது ஒன்றும் அவ்வளவு எளிதானதாக இல்லை. கலைக்காக உழைக்கின்ற ஒருவர் எப்படி அந்தக் கலையுலகத்திலேயே மூழ்கிவிட வேண்டுமோ, அறிவியல் அறிஞர் எப்படி அவரின் அறிவியல் ஆய்வறையையே உலகம் என்று நினைத்து அதிலேயே அடைப்பட்டுக் கிடப்பாரோ, நாட்டுப் பற்றில் அல்லது நாட்டுத் தேசிய இன உணர்வில் ஈடுபட்ட ஈகி ஒருவர் எவ்வாறு அதன் பொருட்டுத் தம் உயிரையும் மாய்த்துக் கொள்ளத் தயங்க மாட்டாரோ, அவ்வாறு தமிழ்மொழித் தொண்டில் ஈடுபட்டு அதனை ஈடேற்றும் முயற்சியிலும் தம்மை ஒருவர் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழின் உண்மையான வடிவத்தை அதன் உலகளாவிய தன்மையை, உண்மையாக, உள்ளது உள்ளவாறே உணர்ந்து கொள்ள முடியும்; உணர்ந்து உலகுக்கும் உணர்த்த முடியும். இது வெறும் வாய்ப்பேச்சால் முடிகிற செயலன்று.

வெறும் இலக்கிய ஆக்கத்தாலோ, வெறும் பாடல்களை யாத்துப் பாவலன், புலவன் என்று பெயர் பெற்று விடுவதாலோ

Scanned with CamScanner

கதைகள் எழுதிக் காசு சேர்த்து விடுவதாலோ, அல்லது ஒரு தமிழ்ப்பேராசிரியாக உயர்ந்து ஊருக்குள் பெரும் பேரறிஞர் என்று உலா வருவதாலோ இயலுகின்ற பணியன்று. உண்மையான தமிழ் வரலாற்றை உணர்ந்த சிறந்த ஒரு வரலாற்றாசிரியனாலும் வரைந்தெடுக்க முடியாத அரும்பெரும் உழைப்பு சான்ற பணியாகும் இது. வெறும் 'தமிழ்வாழ்க' என்னும் முழக்கத்தால் செய்துவிடும் செயலன்று இது. 'தமிழ்வாழ்க' என்னும் முழக்கம் வேறு; அதை வாழவைப்பது என்னும் பெருமுயற்சி வேறு; முன்னையது உணர்ச்சி வடிவம்; பின்னையது அறிவு வடிவம்; அதன் செயல் வடிவம்! உண்மையாகச் சொல்வதானால் நாம் உணர்ச்சி வடிவத்தைக் கூட, இன்னும் முழுமையாக எட்டிவிட வில்லை; அதன் பின்னரே அறிவு வடிவத்தை எட்டி, அதைச் செயலுக்குக் கொண்டு வரவேண்டும். அதற்கு அறிவுமுயற்சியும், பொருள் தேவையும் அளவிறந்து வேண்டும். பாவாணர் இந்த முயற்சிகளுள் ஒருசிறு அளவே எட்ட முடிந்தது. அவர் எட்டிய அறிவு முனைகளுள்ளும் பல போலி முனைகளே! அவற்றைக் கண்டறியும் திறன் அனைவர்க்கும் வாய்ப்பதன்று. இயற்கையான தமிழ் ஆய்வு அறிவு வாய்க்கப்பெற்ற ஒரு சிலரே அதன் உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

கடலுள் மூழ்கியவர்களெல்லாம் முத்துக்குளிப்பதில்லை; இனி, முத்துக் குளிக்க மூழ்கியவர்களெல்லாரும் முத்துச் சிப்பிகளைக் கொணர்வதில்லை; அவ்வாறு, கொணரப்பட்ட சிப்பிகள் அனைத்திலுமே முத்துகள் இருப்பதில்லை; இனி, இருக்கின்ற முத்துகள் அனைத்துமே நன்றாக விளைந்து விலை மதிப்பு மிக்க முத்துகளாகி விடுவதில்லை. அவற்றுள் உண்மையாயினவும் உயர்வானவையும் ஒருசில முத்துகளே! அது போலவே, தமிழ்மொழியாராய்ச்சி செய்கின்றோம் என்பவர்கள் அனைவருமே, தமிழுக்குகந்த உயர்வான, உண்மையான ஆராய்ச்சியாளர்கள் ஆகிவிட மாட்டார்கள்.

பாவாணர் மறைவுக்குப்பின் அத்துறையையே மாற்றியமைக்க வேண்டும் என்று நான் அரசுக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படையான அறிக்கைகள் கொடுத்தேன். அத்துறையிலிருந்தவர்களின் பகட்டுரையாலும் பசப்புப் பேச்சாலும் அரசு நம் வேண்டுகோளை அதன் செவிட்டுச் செவிகளில் ஏற்றிக் கொள்ளவே இல்லை. ஆனால், இன்றுவரை அதன் துறை வெறும் துணி வெளுக்குந் துறையாகவே போய்விட்டது. 'தமிழ் வளர்ச்சித்துறை'யென்றும், 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறை'யென்றும் 'தமிழ்ப் பல்கலைக்கழக'மென்றும் பரபரப்பும் ஆரவாரமும் நிறைந்த பெரும் பெயர்களைத் தாங்கிக்கொண்டிருப்பதுதான் மிச்சம்! உருப்படியாக ஒன்றும் வெளிவந்த பாடில்லை. தமிழ் மொழிக்கு ஆக்கம் சேர்க்கின்றோம் என்று அரசையும் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதுதான் அத்துறைகளின் வேலை. உண்மையான வைரங்கள் என்று வெறும் கண்ணாடிக் கற்களுக்குப் பட்டை தீட்டிக் கொண்டுள்ளனர், அந்தத் துறைகளில் வந்து

அமர்ந்து மக்களின் வரிப்பணங்களைக் கோடி கோடியாக விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருப்பவர்கள். இன்றுள்ள அரசினர்க்கோ தமிழ் வளர்ச்சியில் கிழக்கும் தெரியாது; மேற்குந் தெரியாது. ஏதோ தமிழ்ப்படித்து, எப்படியோ பட்டம் பெற்றுள்ள ஒரு சிலரை வைத்துக் கொண்டு. இலக்கிய மேடைகள் அமைத்துக் கம்பன் பாடல் நயங்களையும், சிலப்பதிகாரச் சீர்களையும் அணிகளையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு மொழியாராய்ச்சியில் எல்லாம் தெரிந்துவிடும் என்று இந்த அரசு நம்பிக்கொண்டுள்ளது. அதன் அறியாமை அத்துணை எளிதில் நீங்கிவிடும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தமிழ் என்றால், ஏதோ சம்பங்கோரை, கப்பைக்கிழங்கு என்று எண்ணிப் பகட்டான ஆள்களுக்குப் பட்டங்களையும் பணங்களையும் பதவிகளையும், வாய்ப்பு வசதிகளையும் மக்கள் பணத்தில் வாரி வழங்கி வருகிறதே, அந்த அடாவடித்தன ஆளுமை முறைகளைத்தாம் நம்மால் பார்த்துக்கொண்டு வெறுமனே இருக்க முடியவில்லை. அது போகட்டும்.

இத்தகைய வறுமையும் வெறுமையும் நிறைந்த தமிழ் வளர்ச்சிச் சூழலில்தான் நம் சொல்லாய்வறிஞர் அருளி நமக்குக் கிடைத்திருக்கின்றார். அவர் தேடக் கிடைக்காத தெள்ளுமணி! மாதவப்பேறு! இறையருட் கொடை! பத்துப் பதினைந்தாண்டுகளுக்கு முன் அவர் மாணவராய் நம் முன் அறிமுகம் ஆனார். அக்கால் இவ்வளவு வைரச் சுரங்கமாய் வளர்ந்து விடுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஏதோ நம் இன, நாட்டு நலத் தொண்டுக்கு இவரும் ஒரு தொண்டராய்க் கிடைத்தார் என்றே, அன்றைய அளவில், நான் அகமகிழ்ந்து கிடந்தேன். பாவாணரை வெறும் 'வித்துவான்' என்றும், புலவர் என்றும் ஆயிரத்துள் ஒருவராய் அனைவர்க்கும் அறிமுகம் செய்து கொண்டிருந்த நிலையில், அவரை ஒருமொழி ஞாயிறாய், தமிழ்மொழிக் கதிரவனாய் எப்படி நாம் கண்டு காட்டி மக்கள் முன் அவரின் ஆய்வின் ஒளிக்கீற்றை உணரப் புலப்படுத்தினோமோ, அதைவிடப் பல மடங்கு அதிக ஆவலுடனும், அறிவுப்புல வேட்கையுடனும், இவ் விளம் பெரும் மொழிப் பேராறிஞரை உலகுக்கு உணர்த்தவேண்டிய கடப்பாட்டுடன் இதனை எழுதுகின்றேன்.

அருளி என்னும் ஆற்றல்சால் இளைஞர் ஆக்கிய 'இவை தமிழல்ல' என்னும் 'அயற்சொல் அகர முதலி'யை நான் கண்டுணர்ந்த பொழுது, அளவிலா பேருவகை கொண்டேன். தமிழுக்கு வந்து வாய்க்கவிருந்த பயன், பாவாணரின் மறைவால் இடையறவுபட்டு, இக்கால் மீண்டும் துளிர் விட்டுத்தழைக்க வாய்ப்பு வந்ததே என்று வானளாவி விரிந்து மகிழ்ந்தது என் நெஞ்சம்! உள்ளக் கூத்தாடினேன்! உணர்வுக் குளிப்பில் நீந்தினேன்! உள்ளத்தில் நம்பிக்கை ஒளி தோன்றியது! இதுபோலும் ஒரு நூல், இற்றை நிலையில், தனி ஒருவரால் எவராலும் செய்ய இயலாது. மொழியாராய்ச்சியாளர் என்று தம்முள் தாமே தருக்கிக் கொள்வாரைச் சூளுரைத்துக் கேட்கிறேன். அருளியின் ஒரு சொல்லாய்வுக் கட்டுரைக்கு ஈடாக எவரேனும் வேறு ஒரு கட்டுரையை ஆய்ந்து

வெளிப்படுத்த இயலுமா என்பதற்கு அரசினுடைய மோதிரக் கையின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சியாளர்கள் விடைகூற வேண்டும்.

இனி, 'இவை தமிழல்ல' என்னும் நூலின் உண்மையான சிறப்பு நிலைகள் சிலவற்றைக் காண்போம்.

முதலில், இந்நூல் ஒன்றே அருளி அவர்களின் முழுமையான அறிவையும் உழைப்பையும் வெளிப்படுத்திக்காட்டும் நூல் ஆகிவிடாது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஆனாலும் இதுபோல் ஒரு நூல் எழுதுதற்கு ஒருவர் எத்தனை நூற்களைக் கற்றிருக்க வேண்டும் என்பதையும், எத்துணை உழைப்பை நல்கியிருக்க வேண்டும் என்பதையும், இந்நூலைப் பார்த்த அளவிலேயே ஒருவர் உணர்ந்து கொள்ள முடியும். அதற்கு அந்த நூலே சான்றாக நிற்கிறது.

இஃது ஒரு சிறிய நூல்தான். முகவுரை, முன்னுரை ஆகியவற்றையும் சேர்த்து 150 பக்கங்களே கொண்டது. ஆனால் இதன் உழைப்பு மிகவும் பெரிது. இதைப்பற்றி நூலாசிரியரே கூறுவதைக் கேளுங்கள்:

"இச்சிறிய சொற்றொகுதி நூலுக்கென, நூற்றுக் கணக்கான மணி நேரங்களை நான் உழைத்துச் செலவிட்டிருக்கிறேன். இந் நூற்கென ஏறத்தாழ இருபத்தியைந்து-முப்பது மொழிகளுக்குரிய பருத்த அகராதிகளின் பக்கங்களை மீள மீளவும், விடிய விடியவும் திருப்பித் திருப்பியும் படித்துப் பார்க்க வேண்டியவனானேன். ஒரு சிறுசொல் ஏற்படுத்திய ஐயத்திற்குப் பத்துப் பதினைந்து மணி நேரங்களுக்கும் மேலாகக்கூட, மிகப் பொறுமையொடும், பொறுப்போடும் செலவழித்து, உண்மையுணர்ந்து, தெளிந்து, அதன்பின் இந்நூலுக்கெனப் பதிந்து வைத்துள்ளேன்." (பக் : 19)

இதன் அமைப்பு முறையைப்பற்றி, அவர் கூறுவது இது :

"ஓரளவுக்கு முற்றுமாகத், தமிழகத்தில் தமிழ்மக்கள் பரவலாகப் பயின்று புழக்கத்தில் மேற்கொண்டுள்ள பெரும்பாலான அயற்சொற்களை எடுத்தாய்ந்து முறையுறத் தொகுத்து, அஃது ஒவ்வொன்றும் இங்கு வழங்கும் வடிவம், அவ்வடிவத்திற்கு உரிய மொழிப்பெயர், அம்மொழியில் வழங்கும் அவ்வடிவின் செப்ப ஒலிவடிவம், (அவை பலுக்கல் தெளிவிற்கும், நுண்மைக்கும் ஆக ஆங்கிலத்தில் குறிக்கப் செற்றுள்ளன.) அச் சொல்லுக்குரிய நேரிய பழைய நற்றமிழ் வடிவம், அதன் பொருண்மைக்கேற்ற பிற இணைச் சொற்கள், பிற நல்லறிஞர்களின் செப்ப ஆக்கங்கள், பலவற்றிற்கு நானே பொருந்த உருவாக்கிய அருஞ்சொல்லாக்கங்கள் என்றவாறு நல்லுழைப்பெடுத்து நுணுக்கமாக அமைத்துள்ளேன்" (பக்:19)

இந்நூலின் பாகுபாட்டமைப்பையும் பயனையும், நூலாசிரியர் கீழ்வருமாறு பலபடியாகக் குறிப்பிட்டுள்ளார் :

Scanned with CamScanner

"தமிழில் வழங்கும் கலப்புச் சொற்களில், எந்தெந்தச் சொல் எந்தெந்த மொழிக்கு உரியது, என்னென்ன பொருள்களை உடையது என்பதை உறுதி செய்து கொள்ள இஃது ஓர் அட்டியல் கல நூல்"

"கலப்புத் தமிழின் பேச்சு நடையையும் எழுத்து நடையையும் அவர்கள் (தமிழர்) விரைவாக மாற்றிக் கொண்டு, தூய செந்தமிழைக் கடைப்பிடித்தற்கு ஊன்று கோலாக நிற்பதே, இந்நூலின் மிக முகாமையான முதல் குறிக்கோள் ஆகும். தமிழர் தம்மை மொழிமானங் கொண்டவர்களாக நிலை நிறுத்திக் கொள்ளத் துணை கொள்ள வேண்டிய அடிப்புலக் கருவிகளில், இஃது ஓர் அரிய படைக்கலமாகும்".

"பாசம், நேசம், தவம், பாரம், தாரம், தூரம் போன்ற நூற்றுக் கணக்கான தூய செந்தமிழ்ச் சொற்களையும் வடமொழிச் சொற்களின் திரிபுகளென்று ஏமாற்றிக் கொண்டு வந்த ஆரியரும், தமிழ்ப் பற்றில்லாது தன்னல வெறியோடு தன்மானங்கெட்ட சில அடிமைப் புலவர்களும், பேராசிரியச் சரக்கிலாரும், அச்சொற்களை யும் அவைபோலும் சின்னூறு சொற்களையும் இந்த அகராதி நூலுள் காணவியலாது அல்லலாடி அலமருவர்! என்ன செய்வது? எவையெவை நம்மவை? எவையெவை அயலவை?--என ஆய்வுக் கட்டளைக் கல்லில் உரைத்துப் பார்த்துத் தெளிந்தே, நடுவு நிலைமையொடும், நயனுணர்வொடும் இந்நூலுள் அயலவை மட்டிலும் வரிசையிடப் பெற்றுள்ளன. வடசொல்லென்று கருதி வந்தது (குறிப்பாக ஐயமுற்றிருந்தது) இதில் தவிர்க்கப் பெற்றிருப் பின், அது-தூயசெந்தமிழ்ச் சொல்லே என்று, பொருளும் கடைப் பிடியும் கொள்ளுதல் வேண்டும்."

"தமிழ்ச் சொற்களல்ல என்பது அறியப் பெருமலேயே பரவ லாகப் பயிலப் பெற்றுவரும் ஏலம், தணிக்கை, அத்து, சாத்துக்குடி, காவு, வேவு, சம்பளம், சராசரி, அடாவடி, அருவம், தகவல் போலும் நூற்றுக்கணக்கான சொற்களும், இஃது எந்த மொழியோ என்று புரியாது அலமரப் பெறும் பட்டாணி, பஜ்ஜி, சிலுவை, ரிக்ஷா, பீங்கான், புருடா போலும் நூற்றுக்கணக்கான சொற் களும் நன்கு உழைப்பெடுத்து, இந்நூலுள் திருத்தக் றிக்கப் பெற்றுள்ளன."

(பக்கம் 20-21)

"இந்நூலுள் சுட்டப் பெற்றுள்ள பெரும்பான்மை சமற் கிருதச் சொற்களுக்கு வேரும் அடியுமாகத் தமிழ் மொழியே இருப்பினும், பிறை குற்றப் பெற்ற பாலைத் தயிரெனப் பெயரிட்டே அழைக்க வேண்டியிருத்தலைப் போல, அவற்றையும் அன்னவாறே சமற்கிருதச் சொற்கள் எனக் குறிக்கப் பெற்றுள்ளன. பிறமொழியினரால் திரித்தொலித்து வழங்கும் சொல்லும், பிறமொழிச் சொல்லெனவே இங்குக் கொள்ளப் பெற்றுள்ள"

— (பக்.: 22)

இனி, இந்நூலுள் ஆசிரியர், தமிழர்க்கு இற்றை நிலையில் இருக்கவேண்டிய கடமையுணர்வைப் பின்வருமாறு சுட்டுகிறார் :

"அனைத்து நிலைகளிலும் தூயதமிழைப் பின்பற்றுவது, தமிழில் இதுவரை தோற்றியிராத பிறமொழிகளுக்குரிய அரிய கலைச் சொற்களைத் தமிழியல்புக் கேற்பப் புத்தாக்கம் புனைந்து வழங்கு வது, உலகம் முழுவதிலும் தோன்றி ஒளிறுகின்ற ஆயிரக்கணக் கான அரிய அறிவு நூல்கள், அறிவியல் நூல்கள், வாழ்வியல் நூல்கள், கலைநூல்கள் ஆகியவற்றைப் பிறமொழிச் சொற்கள் கலவாதபடியாக நுணுகிப் பார்த்தறிந்து நல்ல தமிழில் அவற்றை மொழியாக்கம் செய்து, பரவலாகப் பயனுக்களிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதே—மெய்யாகத் தமிழ் நலமும் இன நலமும் கருதுகின்ற, மானமுள்ள, சூடுள்ள, தூய மனவுணர்வினராகிய, நல்ல தமிழர்களின் இன்றைய இன்றியமையாத கடமையாகும்".

(பக்: 17)

இத்தகைய நல்ல நோக்கத்திற்காக, பிற்காலத்துத் தமிழ் மொழியின் புகழ், பயன் உலக மொழியாளர்களெலாம் உணர்ந்து போற்றுவதற்குரிய அடிப்படை முயற்சியை மறைமலையடிகளார் ஆசைப்பட்டார்; கனுக் கண்டார்; பாவாணர் கண்டு காட்டினார். அருளியார் விண்டு காட்டி விளக்கப் போகிறார் என்பதை இந் நூலின் வழியாகவும்; பெருமதிப்பிற்குரிய அன்புப் பேராசிரியர் ஆறு. அழகப்பனார் அவர்களின் அரும்பெரும் முயற்சியால், சென்னை, எழும்பூரில் உள்ள, 'தமிழ், சமசுக்கிருதம் மற்றும் இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிலைய'த்தில், அவர் நடத்திய சொல்லாராய்ச்சிச் சொற்பொழிவுகளாலும் மெய்ப்பித்து விட்டார் என்றே எண்ணி, இருந்தமிழ்க்குக் கிடைத்த பெருந்தவப் பேற்றை நினைந்து நினைந்து மகிழ்ந்து வருகின்றேன். அத்தகைய அருந்தமிழ் வாழ்வாக்கத்தின் அடிநிலை வெளிப்பாடுதான், 'இவை தமிழல்ல' என்னும் இந்நூல்!

தமிழ் என்றால் என்னவென்றே அறியாத, அறிய விரும்பாத இக்காலத் தலைவர்கள்(!) சிலரும், தருக்கர்கள் சிலரும் நாளை அழிந்து மண்ணோடு மண்ணாய் மட்கப் போவது உறுதி! ஆனால் இத் தாய்நிலத் தமிழ் என்றென்றும் அழியாமல் இறுதிவரை இருப்பதும் இயற்கை போல் உறுதி! எனவே இத் தாய்த்தமிழ் மீட்கியில் அறிஞர் அருளியாரின் முயற்சியை எவர் பாராட்டாது போனாலும் கவலையில்லை; எவர் துணை நில்லாமற் போனாலும் இழிவில்லை. இவ்வரும்பெரும் முயற்சியை அவர் வாணாள் முயற்சி யாக, எதுபற்றியுமே கவலை கொள்ளாமல், புத்துலகப் புது வேளாண்மையாக அவர் எண்ணிச் செய்வார் என்பதற்கு இந்நூல் நமக்கு உறுதி தருகிறது.

இந்நூலைப் பார்ப்பவர்களுக்குப் பல உண்மைகள் விளங்கும்! பலபடியான வியப்புகள் மேலிடும்! தமிழ்மொழியின்கண் இத்தனை

Scanned with CamScanner

மாசு மருவுகளா? இவ்வளவு சேற்றுப் பூசல்களா? இவ்வளவு நாள்கள், ஆண்டுகள்—இவற்றை அறியாமற் போனோமே என்னும் மனவேக்கம், மனத்தாக்கம் குமிழியிட்டுப் பொங்கும்!

நம் இனிய தமிழின் கண் எத்தனை நூறு சமசுக்கிருதச் சொற்கள் வலிந்து புகுத்தப்பட்டன; இன்றும் புன்மைப் புது எழுத்தாளப் புற்று நோயாளிகளால் புகுத்தப்பட்டு வருகின்றன! இனி, சமசுக்கிருதம் தவிர தமிழ்மொழியுள் புகுந்த—புகுத்தப் பெற்ற ஆங்கிலம், உருது, அரபி, பெர்சியன், இந்துத்தானி, மராத்தி, போர்த்துக்கீசியம், தெலுங்கு, டச்சு, உருது, பிராகிருதம், மலையாளம்,—முதலிய சொற்கள் எத்தனை எத்தனை! இவற்றை அருளியார் தவிர இன்றுவரை, இத்துணை விளக்கமாகவும் விரிவாகவும் பட்டியலிட்டுக் காட்டினார் எவர்? பாவாணரும் இவற்றை இத்துணை அடைவாகவும், விரிவாகவும் பட்டியலிட்டு ஒரு கையடக்க அகராதி செய்யவில்லையே! இனி, அவர்தம் 'வட மொழி வரலாற்'றுள்ளும் பிற நூல்களுள்ளும் பிறமொழிச் சொறகளாகக் காட்டிய சிலநூறு சொற்களுக்கும்கூட இத்துணை விளக்கம் கூறப்பெற வில்லையே! இதுவரை வெளிவந்துள்ள திருவாட்டி நீலாம்பிகையம்மையாரின் 'வடசொற்றமிழ் அகர வரிசை' என்னும் ஒரே புறமொழிச் சொல் அகராதியுள்ளும் காட்டப் பெற்றிருக்கும் பலநூறு சொற்கள் பிழைபாடுடையன வாகவன்றோ இருக்கின்றன.

அருளியாரின் 'இவை தமிழல்ல' என்னும் 'அயற்சொல் அகராதி'யுள் காட்டப்பெற்றுள்ள சமசுக்கிருதச் சொற்கள் சிலவற்றையும் பிறவற்றையும் ஒருசேரப் பார்க்கின் அனைவர்க்கும் இவ்வுண்மைகள் தெளிவாக விளங்கும் :

சமசுக்கிருதச் சொற்கள் : (எடுத்துக் காட்டுக்காகச் சில)

அகிலம், அங்கம், அங்குலம், அசடு, அசிங்கம், அஞ்சலி, அதிபர், அதிரசம், அபாரம், அபாயம், அமரர், அமிலம், அருவம், அவகாசம், அவசியம், அவிசாரி, அற்பம், அற்புதம், அன்னம், அன்னியன், அனுகூலம், அனுதாபம், அனுமதி, அனேகம், அனுதை, அனுபவம்.

ஆக்கிரமித்தல், ஆகமம், ஆகாயம், ஆசிரமம், ஆசி, ஆத்திரம், ஆத்மா, ஆதாயம், ஆதாரம், ஆதீனம், ஆபத்து, ஆபரணம், ஆபாசம், ஆமோதி, ஆயுதம்,

இங்கிதம், இச்சை, இதம், இதயம், இதர, இந்து, ஈசன், ஈனம், உசிதம், உதயம், உலுத்தன், ஊதாரி, எதார்த்தம், எமன்,

கச்சடா, கசுமாலம், கம்பீரம், கரம், கர்மம், கருமாதி, கஷ்டம், காமாலை, கிரகணம், கிரயம், கிராமம், கிரீடம், குங்குமம், குஷ்டம், கேது (பாவாணர் தமிழ் என்பார்), கேவலம், கோவணம், (கௌபீனம்), சகுனம், சங்கிலி, சம்பளம் (பாவாணர் தமிழ் என்பார்),

சாதகம், சுபம், சுபாவம், சுயம், சுவாசம், சுவற்பம் (சொற்பம்), சூரணம், சேசுரம், சேதம் (பாவாணர் தமிழ் என்பார்), தியானம் திரவம், திரவியம், திரி, தீபம், தீரம், தீவனம், தீவிரம், துத்தநாகம் துவாரம், தேதி, தைலம்,

நாசி. நாணயம், நாதம், நாதி, நாவிதம், நாறுவிதம், நிகண்டு, நிந்தை, நிபந்தனை, நிபுணன், நியதி, நியமனம், நியாயம், நூதனம், பக்குவம், பகிரங்கம், பங்கா, பசு, பட்சம், பட்சணம், பந்தம், பயித்தியம், பரம்பரை, பராமரி, பரிகாரம், பரிணமம், பரிவாரம். பாத்திரம், பாமரன், பாரம்பரியம், பாலன், பானம், பிசாசு, பித்தளை, பிதா, பிம்பம், பிரகடனம், பிரச்சினை, பிரச்சாரம், பிரசித்தி, பிரசுரம், பிரதி, பிரபஞ்சம், பிரபு, பிரபலம், பிரயாணம், பிரவேசம், பிரளயம், பிராணி, பீடம், புவி, புனிதம், பூச்யம், பூமி. பூர்ணம், பூர்வம், போதனை, மகான், மகிமை, மச்சம், மதங்கம் (பாவாணர் தமிழ் என்பார்), மமதை, மனனம்,

யாதவர், யுகம், யூகம், யோசனை, யோனி, ரகம், ரேகை, ரொக்கம், ரோதனை, லக்கினம், லஞ்சம், லட்சம், லட்டு, லவங்கம், லிபி, லேகியம், லோல்(படுதல்), வக்கிரம், வதந்தி, வமிசம், வர்க்கம்,வர்ணம்,வாக்கு,வாசம்; வாதம் வாதி, வாந்தி,வாயு விகற்பம்,விகாரம், விகிதம், விசாலம், விதம், விதானம், விநாடி ,விபூதி, விமானம், விருத்தம், விருது, விவரி, விவேகம், வீதம், வேசி— முதலியன. (விரிவாக நூலுள் கண்டு கொள்க.)

ஆங்கிலச் சொற்கள் சில :

அபேஸ். அர்த்தால், அலுமினியம், ஆரஞ்சு, ஏக்கர், ஓசி (O.G.S.). கோசு, சாக்கு (Sack),

உருதுச் சொற்கள் சில :

அக்கப்போர், அச்சா, அசல், அத்தர், அத்து, அஸ்திவாரம், அபின், அமுல், அலாதி, ஆசாமி, ஆஜர், ,இஸ்திரி. உடான்(சு), உருமால், உஷார், ஊதா; ஐவசி, அவுட்டு, கச்சா, கச்சேரி, கசாப்பு, கஞ்சா, கப்சா கலாய், கமுர், கஜானா, காப்ரா. காபந்து. கிராக்கி, குமாஸ்தா, குல்கந்து, குல்லா, குருமா, கெஜிலி, கெஸ்தி, கூஜா, சலாம், சவுக்கு, சாப்பா(முத்திரை) சிரஸ்தார், சீசா, சீட்டு, தோலா, நகாசு, நபர், நபி, நிஜார், பக்கா, பந்தோபஸ்து, பயில், வான், பர்பி, பர்வா(யில்லை), பாரா, பிச்சுவா, பிராது, புதினா, பேக்கு, பேசரி, பேட்டி, பேமானி, பைசல், பைசா, ஜவேஜி, போனி (முதல் விற்பனை)- மகமை- மகால்- மசாலா- மஸ்து- மாகாணம்- பாஞ்சா- முண்டா- லாடம்- லோட்டா- வாபஸ் ஜிகினா- ஜீரா- ஷராய்- முதலியன.

அராபிச் சொற்கள் சில :

அடாவடி- அல்வா- அனுமத்து- இலாக்கா- இனாம் -கசர்- கசரத்- காவாலி- தகவல்- நக்கல் (பகடி,ஏகடியம்) நகல்- பாக்கி- மகசூல், மாமூல்- மாலிஷ்- முகாம்(Camp)- முரப்பா - முலாம்- முன்சீப்- ஜாபிதா- ஷரத்து -ஷராப்—முதலியன.

பெர்சியன் சொற்கள் சில :

அக்ரூட்- கல்லா(பணப்பெட்டி)- நமூனா நாஸ்தா- பராரி (ஓடிப்போனவன்)- பாதம்(பருப்பு)- பேஜார்- பைஜாமா- மஜா- மாலுமி- ஷோக்கு முதலியன.

இந்துத்தானிச் சொற்கள் சில :

அண்டா- கோணி (சணற்பை), சட்னி- சவுக்காரம்- சிமிக்கி- டோபி- பல்டி, செலான் (Chalan) முதலியன.

மராத்திச் சொற்கள் சில :

அபாண்டம், சீட்டி(த்துணி), சீட்டி(சீழ்க்கை), பேட்டை முதலியன.

போர்த்துக்கீசியச் சொற்கள் சில :

அலமாரி, அன்னாசி, கோப்பை முதலியன.

மராத்திச் சொற்கள் :

உக்கிராணம், (கை)லாகு.

தெலுங்குச் சொற்கள் சில :

உப்பசம், கட்டாரி, கபோதி, கிலி, கோசரம்(அதற்கிணையாக) சலவை, சிப்பம், சொக்காய், திமிசு, பிகு(வு), பிசநாறி, பிலுக்கு, புருடா(ல்), மகிடி(மகுடி), லாகிரி, ஜாஸ்தி, ஜோலி முதலியன.

பிராகிருதச் சொற்கள் :

கசாயம், சாவு, சவுக்கம், பிக்கு முதலியன.
சாயா(தேநீர்) என்பது மலையாளச் சொல்.
கக்கூஸ் என்பது டச்சு.
ஜால்ரா என்பது இந்தி.
குசினி(சமையலறை) என்பது பிரெஞ்சு.

இவ்வாறு புழக்கத்தில் உள்ள பலசொற்களை ஆய்வடிப்படையில் அடையாளங் காட்டுகிறார் அருளியார். சில சொற்களை என்ன மொழிச்சொற்கள் என்றே தெரியாமலிருக்கின்றோம். பொதுவாகவே இன்று அனைத்துத் துறையிலிருக்கும் பலருக்கும்(தமிழ்த் துறையைச் சேர்த்தே சொல்கிறேன்.) பெரும்பாலான சொற்கள் அடையாளம் (இனம்) தெரிவதில்லை. தமிழ் ஒலிப்பில்லாத சொற்களை அனைத்தையும் வடமொழி(சமசுக்கிருதம்) என்றே நாம் அனைவரும் கருதிக்கொள்கிறோம். அதுவும் பிராகிருத எழுத்துகள் ஜ, ஸ, க்ஷ, ஷ, ஹ போன்ற எழுத்துகள் விரவி வந்தால் அவை சமசுக்கிருதமாகத்தான் இருக்க வேண்டும் என்றும் கருதி விடுகிறோம். சிலர், தத்தமக்குத் தெரிந்த வகையில் வேரும் அடியும் மூலமும் அறியாமல், வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லாராய்ச்சி செய்து வருகின்றனர். அவர்களின் அறியாமையை அவர்கள் அத்துணை எளிதில் உணர்ந்து கொள்ளல் இயலாது. ஓர் உண்மை வெளிப்படும்பொழுது, அதற்கு அருகிலேயே போலிகளும் பொய்களும் விளைந்து வரும். ஆனால் உண்மை வலுப்பெறும்

பொழுது அவை அழிந்துபோகும். அதற்காக நாம் கவலுற வேண்டுவதில்லை. காலந்தான் அனைத்துக்கும் விடைசொல்ல வேண்டும்.

இவ்வகராதி அதற்கெல்லாம் ஒரு தெளிவை நமக்குத் தருகிறது. ஆசிரியர் அருளியாரின் உழைப்பு இன்றைக்குப் பலராலும் அறியப் பெறாமலிருக்கலாம். ஆனால் வரும் காலத்தில் இத் துறையில் அவருடைய ஆராச்ச்சிதான் நிலை நிற்கப்போகிறது. அவரின் அறிவு இத்துறையில் நன்கு வேர்விட்டு மொழியியலுக்கு வேண்டிய ஆழ அகலப் பரப்புடன் சிறப்பாக வளர்ந்து வருகிறது. அது நன்கு பூத்துக் காய்த்துக் கனியப்போவது உறுதி. பாவாணர் நிலையினும் அருளியாரின் விளைவு ஒரு படிநிலை வளர்ச்சியாகவே நமக்குத் தெரிகிறது. வெறும் அன்பாலோ, உறவுணர்ச்சியாலோ நான் இதைக் கூறவில்லை. நடுநிலையும் அறிவுநிலையும் திறம்பாத மெய்யுணர்வால் கூறுகின்றேன். அவரால் தமிழ்மொழி பெற விருக்கும் நன்மைகள் பல. அவற்றால் தமிழுக்கு உயிரூட்டமான விளைவு ஏற்படப்போவது மெய்! அவரின் ஆய்வறிவு வெறும் இலை தழைகள் மிடைந்த மாலையன்று. நன்குசுடர்விட்டு ஒளிவீசப்போகும் வயிரமணி மாலை! அதில் அவர் செருக்கற்ற உணர்வுடனும், அளவுக்கு மீறிய உழைப்புடனும் ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும் காலந்தான் இதையும் கணிக்க வேண்டும். பாவாணரைப்போல் அகவை முதிர்ந்த நிலையில் பழுத்ததன்று அருளியாரின் மொழியாய்வுணர்வு; கல்வி நிலைகளாலும் கனிந்ததன்று. கருவில் திருவுற்றது. இறையருளின் இயற்கை வெளிப்பாட்டடிப்படையில் தோன்றியது அது. அதனை அவர் வலுப்படுத்தி நிலைப்படுத்திக் கொண்டு செயலாக மலர்த்தி மக்களுக்குப் பயன்படும்படி வழங்குதல் வேண்டும். அவர், வேறு வாழ்வியல் முயற்சிகளில் ஈடுபட்டு, அவருள் கிளர்ந்த மொழியியல் ஆய்வு முனையைக் கருக்கிக் கொள்ளாதவாறு, அவருக்குப் பல்லாற்றானும் துணை நின்று உதவும்படி அன்பர்களுக்கும் கூறிக் கொள்கின்றேன்.

இனி, அவர் நூலில் பல வியப்பான சொற்கள் இன்னின்ன மொழிகளைச் சேர்ந்தவை என்று சிறப்பாக எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

ஏலம், ஓமம், கசகசா போலும் பலசொற்களை இதுவரை எவரும் இனங்கண்டு காட்டவில்லை. ஆனால் அருளியாரின் இந்நூல் அவற்றைப் பகுத்துக் காட்டுகையில் நாம் வியந்து போகின்றோம்!

ஏலம், ஓமம், லவங்கம், சன்மானம், சீத்தாப்பழம், சீதனம், சூபம், தனியா, சஜம், தாம்பூலம், தாமுதம், தானியம், துப்பட்டி, நிருபர், பத்தியம், பதார்த்தம், பந்த், பேதி, மாளிகை,ராகி, லட்டு, விபூதி, முதலிய சொற்கள் சமகசிருதம்!

கசகசா, கடிதாசி, காப்பு, கதர், காதி, காலி, கித்தான், கிராம்பு, கிருதா, கெஜம், கைதி, கொப்பரை(த்தேங்காய்), சந்தா, சர்பத்து, சராசரி, சல்லிசு, சவ்வரிசி, சவ்வாது, சவடால், சவரம், சக்கிமுக்கி,

சாத்துக்குடி, சாதா, சாமான், சால்வை, சாலேசரம், சிட்டா, சிட்பந்தி, சிபாரிசு, சுங்கான், செலாவணி, டப்பாசு, டாபர் (காட்டிக் கொடுப்பவன்), தண்டோரா, தபால், தமாஷ், தமுக்கு, தயார், தர்ணா, தராசு, தவில், தஸ்தாவேஜி, தாக்கல், தாஜா, தாசில்தார், தாயத்து, திவால், தினுசு தேக்சா, தொப்பி, தோட்டா, பங்களா பஜார், பஜாரி, பட்டி Bill), பட்டுவாடா, படவா, (காட்டிக் கொடுப்பவன்), படா (பெரிய), படுதா, பதில் புல்லாக்கு, சடை (பில்லை), பிஞமி, பீடி, பூந்தி, பூரா, பூரி, போதை, மசோதா, மத்தாப்பு, மராமத்து, மிராசு, மைதா, மைனு, மௌசு ராஜிநாமா, ராட்டினம்-ராட்டை ராத்திரி-ருசு, ரேகு, ரேக்களா, லோலக்கு, வகையறு‘வசூல்; ஜமாய், ஜல்தி, ஜாகை, தோடி (பண்-விளரிப்பாலை), முதலியவை உருதுச் சொற்கள்!

கசரத், சைத்தான், தணிக்கை, தபேலா, தபா (தடவை), தாக்கீது, தாலுக்கா, தாவா, மக்கார், மகசூல், மசஜர், மிட்டாய், ரத்து, லாயக்கு, லாயம், வக்காலத்து, வக்கீல், வாரிசு, வாய்தா, ரஜா, ஜப்தி, ஜமா, ஜிப்பா, ஜில்லா, ஜேபி—ஆகியவை அரபிச் சொற்கள்.

கம்மி, காக்கி, கிஸ்தி, சிப்பாய், சுமார், செஞ்சி (போர்க்களம்—தமிழகத்தில் இப்படி ஓர் ஊரே இருக்கிறது!), ஜமீன்தார், ஜரிகை, ஜவான், ஜோர், ஹுக்கா, சேணம், தத்தாரி, தம் (மூச்சு), தர்பார், தரப்பு (பக்கம்), ரசீது, ரஸ்தா, மோர்சிங், லுங்கி, வஸ்தாது, மைதானம்—முதலிய சொற்கள் பார்சியன் (பார்சி மொழிச்) சொற்கள் என்று இந்நூலைப் பார்த்தே தெரிந்து கொள்கிறோம்.

‘ஹமாம்’ (Hamam) என்னும் வழலை (Soap)க் கட்டியைக் குறிக்கும் சொல்லுக்குக் ‘குளித்தல்’ என்று பொருள் என்பதும் இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளது. இதுவும் பார்சிச் சொல்லே.

காமாட்டி (மனைவியை இழந்தவன்), காகிதம், கிச்சடி, கில்லாடி கெண்டி, கேசரி, சாம்பார், சாவடி, சுதாரித்தல், பகாளபாது, பட்டாணி, லாவணி (பாட்டு), வில்லங்கம், ஜட்கா, ஜம்பம்,—ஆகிய சொற்கள் மராத்திச் சொற்கள் என்பதை இவ்வகராதியைப் பார்த்தே உணர முடிகிறது.

கொய்யா (ப்பழம்), கொரடா, சப்பாத்து, சாவி, பீப்பாய், பீரங்கி, வராண்டா, வேவு, மேஜை, மேஸ்திரி, ஜன்னல்—முதலியவை போர்த்துக்கீசியரால் தமிழுக்கு வந்தவை என்று இந்நூல் கூறுகிறது.

சந்தடி, கொலுசு, ஜன்னி, ஜட்டி—ஆகியவை தெலுங்குச் சொற்கள் என்பதும்,

தண்டால், ரகளை—கன்னடச் சொற்கள் என்பதும்,
பப்பாளி, சாம்பிராணி—மலாய்ச் சொற்கள் என்பதும்,
சேமியா, சோளி—பஞ்சாபிச் சொற்கள் என்பதும்,
பம்பளிமாஸ், துட்டு—டச்சுமொழிச் சொற்கள் என்பதும்,
துப்பாக்கி—துருக்கிமொழிச் சொல் என்பதும்,

Scanned with CamScanner

பீரோ, ரோந்து, லாந்தர், பட்டாளம்—ஆகியவை பிரஞ்சு மொழிச் சொற்கள் என்பதும்,

பனியன்—அரபிச்சொல் என்பதும்-
பில்லி (சூனியம்)—சிங்களச் சொல் என்பதும்-
பெட்டிக்(க்கடை), பேரிக்காய்- புனல்- ரா ங் கி - ஆகியவை ஆங்கிலச் சொற்கள் என்பதும்-

ரிச்ஷா—சப்பானியச் சொல் என்பதும்,
வீசம்—பாலிமொழிச் சொல் என்பதும்,
சிலுவை—சிரியக் (மேற்கு அரமிக்) மொழிச் சொல் என்பதும்,
ஆதாம் (முதலவன்)—எபிரேயச் சொல் என்பதும்,

சாமி (பாவாணர் சமசுக்கிருதம் என்பார்), சுங்கம், ஞானம்—ஆகியவை பிராகிருத மொழிச் சொற்கள் என்பதும்,

ரோஜா—இலத்தினச் சொல் என்பதும்,

கோந்து, சட்னி (துவையல்), சொஜ்ஜி, ஜோடனை ஜாடா, ஜாதை, ஜிமிக்கி, ஜிலேபி, ஹர்த்தால், சோதா, டப்பா, டேரா, தம்பிடி-துப்பட்டா-மிட்டா-ரவை-ரொட்டி-லத்தி-லேவாதேவி - முதலிய சொற்கள் இந்தி என்பதும்-

லகான், லங்கோடு, லடாய், பக்கோடா, ஜமக்காளம்,-முதலியவை இந்துத்தானி என்பதும், - நம்மில் எத்தனைப் பேர்களுக்கு, அல்லது பேராசிரியர்களுக்குத் தெரியும்? இந்நூலைப் படித்தே நாம் அவற்றை அறிந்து கொள்கிறோம்.

கற்பூரம் என்னும் சமசுக்கிருதச் சொல்லும், சாம்பிராணி என்னும் மலாய்மொழிச் சொல்லும் வாழ்வியலில் எவ்வாறு இணைந்து மணம் வீசுகின்றன, பார்த்தீர்களா?

இன்னும், மணிலா(க் கொட்டை) என்பது, ஆங்கிலச் சொல் என்கிறது இவ் வகராதி! 'பிலிப்பைன்சு' தீவின் தலைநகரான மணிலா என்னும் தேயப் பகுதியினின்று கொணரப் பெற்றமையால் அக் கொட்டைக்கு அப்பெயர் வழங்குகின்றது என்பது நூலுள் காணப்பெறும் விளக்கம்.

மைசூர் பாகு-என்பது உருதுச்சொல். மைசூருக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்பது எவருக்கும் தெரியாது. இந்நூலில்தான் இச்சொல் கீழ்வருமாறு விளக்கப் பெறுகிறது.

"இதில் வரும் மைசூர் என்பது, பெர்சியன் (பாரசீக) மொழியில் Missi எனக் கற்கண்டைக் குறித்த சொல்லின் கொடுந்திரிபாகும். எருமையூர் (மகிஷனூர்) ஆகிய மைசூருக்கும் இதற்கும் எள்மூக்கத்துணையும் தொடர்பில்லை".

அதுபோல் உருது மொழிக்கும் ஒரு விளக்கம் தரப் பெற்றுள்ளது.

'உருது—என்னும் ஒருமொழி சமசுக்கிருதத்தைப் போலும் ஒரு கூட்டுமொழி. உருது என்னும் சொல்லுக்குப் படை, பாசறை என்றே பொருள். முகமதிய வீரர்கள் தங்கியிருந்த படைப் பாசறையில் பயன்படுத்திய பாரசீகம் (பெர்சியன்), அரபி, இந்தி ஆகிய மொழிகளின் கலவையாகிய ஒரு கூட்டுமொழியே உருது ஆகும்'.

இத்தகைய அரிய விளக்கங்கள் இந்நூலுள் வருவது நமக்குப் பெரும் வியப்பைத் தருகிறது.

இனி, நூலுள் வரும் விளக்கமல்லாத அல்லது விளக்கப்பட வேண்டிய கூறுகள் சிலவற்றைப் பற்றியும் சொல்ல வேண்டியுள்ளது.

1. பொக்கிஷம் — என்னும் சொல் தெலுங்குச் சொல்லாகக் காட்டப்பட்டுப் பொக்கசம் என்று தமிழில் பொருள் கூறப் பெற்றுள்ளது. இதில் மூலம் தமிழே என்பதில் ஐயமில்லை. இதைத் தெளிவாக விளக்கியிருக்கலாமே!

2. பூரி—என்பது உருதுச் சொல் என்கிறது நூல். மூலம் தமிழ் ஆக இருக்கலாமோ? பூரித்தல் — உப்புதல் என்பது தமிழன்றோ?

3. பாட்டில் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு (இவ்வகராதிப்படி) புட்டில் தானே தமிழ் மூலமாய் இருத்தல் வேண்டும்.

4. பத்தினி—இதைச் சமசுக்கிருதமாகக் காட்டியுள்ளார் அருளியார். ஆனல், பாவாணர் பற்று என்பதை மூலமாகக் கொண்டு, பற்று—பற்றி—பத்தி—பத்தன்—பத்தினி என்று பிரிப்பது சரியாகத்தானே உள்ளது. பொன்னைப் பற்ற வைப்பவன் பற்றன்—பத்தன் என்று எடுத்துக் காட்டியும் உள்ளாரே!

5. பாயா—என்னும் சொல் சமசுக்கிருதமாகவும் குறிக்கப் பெற்றுள்ளது; உருதுவாகவும் குறிக்கப்பெற்றுள்ளதே! இஃது என்ன குழப்பம்!

6. தீவிரம்—தமிழை மூலமாகக் காட்டலாமே.

7. சிட்டா—உருது; தமிழ் சிட்டை என்று காட்டப்பெற்றுள்ளது. சிற்று—சிட்டு—சீட்டை. சிட்டுக்குருவி தமிழ்தானே! சிட்டை சிறு குறிப்பு—எனப்பெறுவதில் தவறென்ன?

8. சபா (சமசு) சவை-சபை-இதற்கு அவை என்பதுதானே மூலம். இதையும் காட்டியிருந்தால் இன்னும் விளக்கமாகி இருக்குமே!

9. கர்ப்பம்—சமசுக்கிருதமாகக் காட்டப்பெறுகிறது, கருப்பம் என்னும் தமிழ்தானே மூலம்.

Scanned with CamScanner

10. அதேபோல் கர்மத்திற்கும் கருமம் என்னும் தமிழ்தானே மூலம்.

11. அதுபோல் மர்மம்(சமசு) என்பதற்கும் மூலம் மருமம் என்னும் தமிழ்ச் சொல்லன்றோ!

12. மரி (சமசு); இதற்கும் மடி—மடிதல் என்று தமிழ்மூலம் காட்டியிருக்கலாமே!

13. மனனம் - சமசுக்கிருதமாகக் காட்டப் பெற்றுள்ளது. மனம்-தானே மூலம்-மனனம்-மனப்பதிவு.

14. மாகாணம்-உருது என்று நூலில் உள்ளது. இதை மா-பெரிய; காணம்-காணிநிலம்-பெருநிலம் என்று பொருள் பிரிப்பதில் தவறில்லையே! எண்ணிப் பார்க்கலாம்.

15. மாளிகை-சமசுக்கிருதமா? மளிகை என்பது தமிழாக இருக்கையில் (மலிதல்-மளிதல்-பொருள்கள் நிறைந்த சரக்குக்கடை), அதே வேரில் கிளைத்த தமிழ் என்பதால் வரும் தவறு என்ன?

16. மிருது-(சமசு)-மெது என்பதன் வடமொழித் திரிபுதானே! இதை வெளிப்படையாகக் காட்டினுல் என்ன?

17. யந்திரம் (சமசு)-எந்திரம்-இயந்திரம்-தமிழ்தானே?

18. ரத்தம் (சமசு)-அரத்தத்தின் (சிவப்பானது) திரிபுதானே!

19. ராட்டினம்-உருது; ஆனுல் இருட்டினம் என்பதைத் தமிழாகத் தந்திருப்பது எப்படி?

20. ராட்டை (உருது); தமிழில் இராட்டை என்று எப்படி வரும்?

21. ராத்திரி-உருது-தமிழில் இரவு. எப்படி? ராத்திரியிலிருந்து இரவா, இரவிலிருந்து இராத்திரியா?

22. அதே போல் சமசுக்கிருதச் சொற்களான லகு, லோகம், வர்ணம், வர்ணி, வேஷ்டி, ஜாடி ஜீரகம் என்பவெல்லாம் தமிழில் இலகு, உலகம், வண்ணம், வண்ணித்தல், வேட்டி, சாடி, சீரகம்-என்று வருவனவாகக் காட்டியிருப்பதை விளக்கியிருக்க-அல்லது மூலம் காட்டியிருக்க-வேண்டாவா? விளக்கம் விரிவாகுமானுல் சுருக்க விளக்கமாவது இருந்திருக்கலாமே!

— இன்னும் பல சொற்கள் இப்படியே விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

முடிவாக, நூலைப்பற்றியும், நூல் முயற்சியைப்பற்றியும், நூலாசிரியரைப் பற்றியும் நாம் கூற வருவன இவை :

நூல்-இதுவரை எவரும் சிந்தித்திராத-சிந்தித்திருந்தாலும் செயல்படுத்தாத அரும் முயற்சி. முயற்சி சிறிதாயினும் பெரும்பயன் நல்குவது! தனித்த ஒருவர் செய்வதற்கு அரிது! அந்த அருமையை அனைவரும் உணர்தல் வேண்டும். அறிந்து ஆசிரியரை மேலும் ஊக்குதல் வேண்டும்.

நூலாசிரியர் இளமையில் அறிவு முதிர்ச்சியுடையவர். எனவே, அகவையில் முதிர்ந்த அறிஞர்கள் இவரின் விளைவைப் பார்த்து வியப்படைவதைவிடப் பொருமையால் புழுங்கவே செய்வர். அது தமிழறிஞர்க்கே இயல்பான உணர்வு. பொருமையால் குற்றமும் காணலாம். இந்நிலையில் ஆசிரியர் அடக்கவொடுக்கமாக, அமைவாகக் கருத்துகளைக் கூறியே, தம் செயலில் வெற்றிகளை ஈட்டுதல் வேண்டும். இவர்தம் 'முகமுனைவுரை'யில் சில இடங்கள் முனைப்புரையாகவே வெளிப்படுகின்றன. மெய்யறிஞர்கள் இவ்வுறைப்புரையால் முகஞ்சுளிக்கவே செய்வர். அதனால் இயல்பான வளர்ச்சி கெடும். அறிவுநூல் எழுதுவார்க்குக் கொப்பளிக்கும் உணர்ச்சியுரை கூடாது. அது பயனைக்கெடுக்கும்; பிறரைச் சிந்திக்கத் தடுக்கும்; பேறுமை கொடுக்கும்!

இவர், முகமுனைவுரையில் பயன்படுத்தியுள்ள சொற்கள், சில என் நெஞ்சைப் பிழிந்தன. அறிவை அதிர்வுறச் செய்தன. உயர்திற அறிஞர்களும் சான்றோர்களும் படிக்கும் இந்நூலுள், கீழ்மை விளக்கம் தேவையில்லை. அச் சொற்களிலும் கனிவும் கவல்பும் இன்றிக் கடுமையும் தடிமையும் உள்ளன. இவை உள்ளத்தை மிகுதியும் வருத்துகின்றன. மண்ணில் விளையும் பொன்னைப் பிரித்தெடுக்கையில், மண்ணை இழிக்கத் தேவையில்லை. பார்வை, உயர்வில் படிகையில், தாழ்ச்சியில் ஊர்தல் போன்று, நூலாசிரியர் பயன்படுத்தும் சில சொற்கள் பயன் பெருமையைக் குலைக்கும் தன்மை பெறுகின்றன. இனியேனும், இத்தகைவிலாத (பிண்டங்கள், அறியாப் பிள்ளைகள், கொம்மாளப் பையன்கள், நாகரிகக் கொம்மாளிகள், போக்கிலிப் பிள்ளைகள், அரசியற் குஞ்சுகுசுமான்கள், கொழுத்துக் கொம்மாளித்து வரும் சில கூறுகெட்டதுகள், மோந்து பார்த்து மூக்கால் நுளப்பும் சில புதின எழுத்தாளப் பன்றிகள், சில கதையெழுதும் கழுதைகள் முதலிய) சொற்களை இதுபோலும் அறிவுப் பரிமாற்றப் படையலில், அல்பொருள்களைப் படைத்தல் போல், நூலுள் கையாளல் வேண்டா என்று ஆசிரியரை இறைஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன் இந்த இறைஞ்சலோடு, போலி உலகியலின் புன்மைச் செயல்களால் அவர் அறிவு நிலைதிரியாது நின்று நிலவி, எந்தமிழ்க்கு ஏற்றம் கொளுவி, இறைமை சேர்க என்று நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

—பெருஞ்சித்திரனார்

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

இவை தமிழல்ல

(அயற்சொல் அகராதி)

விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

அறிவன் பதிப்பகம்: 2/4,காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

அன்பின் விளைநிலங்கள் !

தென்மொழி முத்துக் குமரனின் திருவுளம்
என்மொழி, இன,நிலத் தொண்டுக்கு எருவாம்!
பல்லடம் பயந்த பண்புள்ள உருவம்!
சல்லடை போட்டுச் சலித்தெடுத் தாலும்
கரவும் கயமையும் கள்ளமும் நிறைந்த
உருவம் பற்பல உலாவரும் காலத்தில்
எங்கணும் காணு இறைமைத் திருவுளம்!
பொங்கும்அன் பருவி! புரையிலாப் பொய்கை!
அன்பின் விளைநிலம்! ஆருயிர் மருந்து!
என்பெலாம் நெகிழ்க்கும் இன்ப உணர்வுளம்!
குளிர்மதி நல்முகம்! குறையிலா உரைவாய்!
வெளிர்ஒளி உள்ளம்! விரிநிறை அறிமதி!

அத்தகு உளத்தோ டமைந்துளம் பொருந்திய
மெத்த அன்புரை மேன்மை உளங்கள்
இரண்டுள! அவற்றுள் இனியநல் ஒன்று,
திரண்டுள அன்பெலாந் திருமுகத் தொளிரும்
பல்லடம் ஆறு முகத்தின் திருவுளம்!

வல்லமற் றென்று, வாழ்வுறுந் தென்மொழி
துரையரசு சாளும் தூய்மைப் பேருளம் !
உரையிலும் செயலிலும் உண்மைமற் றில்லா
வேறறி யாத வியத்தகு உள்ளம்!
ஏறுமா றில்லா இன்சொல் வழங்கி
அன்றும் இன்றும் அகலா வுணர்வொடு
என்றும் ஒன்றுபோல் இருக்கும் தமிழுளம்!
வடியா அன்பொடு மாந்தன் இருக்க
முடியுமென் பதற்கு முழுச்சான் றவருளம்!

ஆறு முகமெனும் அணையா விளக்கம்!
ஏறுமென் உணர்வுக்கு ஏற்ற தூண்டுகோல்!
செல்வர் ஒருவர் சிதையா நெஞ்சொடும்
ல்வர் றுணர்ந்த பட்டறி வோடும்

தண்டமிழ்ப் பணிக்கும் தமிழினத் தொண்டுக்கும்
'உண்டுநான் துணை-'எனும் ஒருமை உணர்வொடும்
நிறை று நிலைபெறு கின்றார் எனில்,அது
தொன்றுதொட் டுயர்ந்த தூய்மர பன்றோ?

எத்தனைச் செல்வர் இழிந்து போயினர்!
எத்தனை உளங்கள் இருட்குழி ஆயின!
அத்தகைத் தாழ்ச்சிகள் அணுவும்அணு காது
மெத்தகு மேன்மையால் மேன்மேலும் சிறந்து
இம்மு வுளங்கள் இருக்கும் சீர்மையால்,
தென்மு வேந்தரின் திருநிலம் போலப்
பல்லடம் எனும்ஊர் பரவுசீர் ஊராய்க் —
கல்லும் கரம்பும் கனலெறி காற்றும்
நிறைந்திருந் தாலும் நெஞ்சினுள் நிற்கும்
மறைந்திலாப் பெயராய் மண்டுபுகழ் எய்தி
அன்பின் விளைநிலம் ஆகி
இன்பநல் ஊரென எம்மொடு விளங்குமே!

இரண்டகத்தின் வடிவங்கள்!

— கடவூர். மணிமாறன், க.மு.

மொழியுணர்வும் நாட்டுணர்வும் மாந்த னுக்கு
முகத்திரண்டு விழிபோலாம் : இயல்பாய்த் தோன்றும்
மொழியுணர்ச்சி சிறிதுமிலா முண்டம் எல்லாம்
மொழிப்பற்றை மொழிவெறியென் றுரைத்து நம்மேல்
பழிதூற்றிப் புறம்பேசும்; தன்மா னத்தைப்
பதுக்கிவைத்து விலைபேசும்; உணர்வில் லாத
கழிசடைகள் பிதற்றுவதைக் கருத்திற் கொண்டு
கவல்வதற்குத் தேவையில்லை; அச்சம் வேண்டா!

நாய்களெனக் குரைப்பார்கள் சிலபேர்; குள்ள
நரிகளெனச் சிலர்பள்ளம் பறிக்கப் பார்ப்பார்!
வாய்ப்பிருந்தால் சுற்றிவந்து குழைப்பார் வாலை;
வற்றிவிட்ட குளமென்றால் பறந்து செல்வார்!
ஏய்ப்பதிலே முன்னிற்பார்! இவர்க ளெல்லாம்
இரண்டகத்தின் வடிவங்கள்! புரிந்து கொள்வீர்!
காய்களைத்தீங் கனியென்பார்! கரும்பும் வேம்பாய்க்
கசக்கிறதென் றுரைத்திடுவார்! நம்ப வேண்டா!

16 (2)

பெயர்ப்பட்டியல்-2

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி — 20, ஓலை 5-6-இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பெறுகின்றன.

1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல் :

தென்மொழி

5	மா. தானியேல், (க. இளந்திரையன் வழி)	வள்ளியூர்	200.00
6	சி. கணேசன்,	கிரனூர்	200.00
7	அ. தமிழரன்,	வெங்காலூர்	200 00
8	கி. நா. சீனுவாசன்,	வேங்கைவாடி	200 00
9	நா. அன்புச் செல்வன்,	திருப்பராய்த்துறை	200.00
10	எம். சேரலாதன்,	வெங்காலூர்	200 00

தமிழ்ச்சிட்டு

5	சி. கணேசன்,	கிரனூர்	120.00
6	பொற்செழியன்,	வெங்காலூர்	120.00

2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :

தென்மொழி

2	க. இளந்திரையன்,	வள்ளியூர் 10 உறுப்பினர்கள் 10 × 15	150.00
3	கி. பெருமாள்,	களமாவூர் 10 உறுப்பினர்கள் 10 × 15	150.00

தமிழ்ச்சிட்டு

1	க. இளந்திரையன்,	வள்ளியூர் 25 உறுப்பினர்கள் 25 × 6	150.00

3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் :
10-5-84 முதல் 25-6-84 முடிய

1	சோ. மணிமுத்து,	பழனி	3.76
2	க. பழனியப்பன்,	கரூர்	25.00
3	சோ. மணிமுத்து,	பழனி	5 55
4	துப்பாக்கி தி. அன்பழகன்,	திருச்சி	15.00
5	த. கரிகாலன்,	முசிறி	20.00
6	க கதிர்குன்றன்,	அமரர்பூண்டி	10.00
7	கா. இளமுருகன்,	புளியம் பட்டி	23.00
8	மா. இலக்குவன்,	புதுக்கோட்டை	10.00

Scanned with CamScanner

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் நிற்காமல் தொடர்ந்து வெளிவரும் என்றும் அவ்வாறு வருவதற்கு அன்பர்கள் என்ன வகையான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் முந்தைய மாதத் தென்மொழி (சுவடி:20,ஓலை 5-6)-இல் ஒரு திட்டம் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

அத்திட்டத்தை மீண்டும் கீழே தருகிறோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும், நிற்கக்கூடாது என்று விரும்பும் நன்னெஞ்சங்கள், அருள்கனிந்து இத்திட்டத்திற்கு ஒல்லும் வகையால் உதவ வேண்டுகிறோம்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும் உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவரவர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும். பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. 'தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு 200 தமிழ்ச்சிட்டுக்கு உரு. 120 /-

பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழுக்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன்பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் கணிசமான நன்கொடைகளைத்தரவும், இயன்றால் திரட்டி அனுப்பவும் வேண்டும். இந்நான்கு முயற்சிகளையும் தொடர்ந்து ஒரு மூன்று அல்ல நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும்.

போதுமான அளவு நிலை சரிசெய்யப் படாதபொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டு விடுவோம். இவ்வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப்பெறும்.

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்

உலகில் பல பாகங்களிலும் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தியதின் பயனாக பல வேதிச்சுரவு(கார்மோன்)களை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். பயன்படுத்தக்கூடிய நிலையில் அந்த வேதிச்சுரவுகளைப் பிரித்தெடுத்தல் பல சிக்கலான வழிகள் மூலம் நடைபெறுகிறது. வாயின் மூலம் உட்கொள்ளப்பட்ட பெரும்பாலான வேதிச்சுரவுகள் வயிற்றில் சேர்ந்த உடனேயே அழிக்கப்படுகின்றன. ஊசிமூலம் உடலில் செலுத்தினால், சில வேளைகளில் எங்கு தேவையோ அங்கு சென்று அடையாது, உறிஞ்சப்படலாம். பொதுமக்களும் வாங்கிப் பயன் அடையும் அளவில் வேதிச்சுரவுகளின் விலை குறைவாக இருக்க வேண்டும். இன்றும் பல வேதிச்சுரவுகளின் விலை யானைவிலை, குதிரை விலையாகத்தான் இருக்கின்றது. இயற்கையில் மிகக் குறைந்த அளவிலேயே அவை கிடைக்கின்றன. அவற்றைப் பிரித்தெடுக்கும் முறைகளோ மிகச் சிக்கலானவை. செலவாகக் கூடியவை. கொப்பூழ்க் கொடி, விலங்குகளின் வித்துகள், கருத்தறித்த பெண்களின் சிறுநீர் ஆகியவைகளில் இருந்து வேதிச்சுரவுகள் பிரித்து எடுக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து எவ்வளவு கிடைக்கும் என்பதை நாமே நினைத்துப் பார்க்கலாம். எல்லா வேதிச்சுரவுகளையும் செயற்கை முறையில் உண்டாக்க முடிந்தால்தான் பொது மக்களுக்கும் பயன்படும்படி செய்ய இயலும். எல்லா வேதிச்சுரவுகளையும் செயற்கை முறையில் உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் முயன்றுவருகின்றனர். வெற்றிகள் பலவும்பெற்றுள்ளார்கள்.உறுப்பு மருத்துவமுறை முழுமைபெற மேலும் சிறிது உழைக்க வேண்டும். அவ்வழியில் அது சென்று கொண்டிருக்கிறது என்பதில் எவ்வகை ஐயமுமில்லை. வேதிச்சுரவு மருத்துவ முறையை அதில் பழக்கப்பட்ட மருத்துவ வல்லுநர்களே கைக்கொள்ள வேண்டும். மருத்துவ வல்லுநரின் உதவியின்றி நோயாளி தமக்குத்தாமே வேதிச்சுரவு முறையை கைக்கொண்டால், பணத்திற்குப் பணமும் பாழ், காலத்திற்குக் காலமும் வீண். தம் நோய்க்கு எந்த வேதிச்சுரவு வேண்டற்பாலது என்பதை நோயாளியால் கண்டுபிடிப்பது எளிதன்று. அத்துடன் அளவு சிறிது கூடினாலும் போதும், வந்தது வினை! நன்மை செய்ய பயன்படுத்தப் போய் தீமையாய் வந்து முடியும். பால் உணர்ச்சியைப் பொருத்தமட்டில் மிகச்சிக்கல இல்லாமலும், ஒரு குறிப்பிட்ட வேதிச்சுரவுதான குறைவு என்று உறுதியாகத் தெரிந்தாலும், மருந்துக்கடைகளில் கிடைக்கும் வேதிச்சுரவை வாங்கிப் பயன்படுத்திப் பார்க்கலாம்! அப்பொழுதும்

மருத்துவரின் உதவியை நாடுவதே நன்று. காம்முட்டிகளை ஆக்குவதில் எவ்வளவு பொய்யும், புனைவும், புனைச்சுருட்டும் உண்டோ, அந்த அளவில் இம்மியும் குறையாது வேதிச்சுரவாக்குவதிலும், உண்டு. ஆகவே புகழ் பெற்ற பெரிய மருத்துவக் குழுமங்(கம்பெனி)களின் சரக்குகளை வாங்குவதே நன்று. எல்லாக் குழுமங்களின் சரக்குகளிலும் பெரும்பாலும் வித்தின் சத்துதான் கலந்திருக்கும்.

இளமை பெறல் ; அறுவை முறை :

உறுப்பு மருத்துவமுறைக்கோ அல்லது வேறு எம்முறைக்கோ, கிழத்தன்மையை மாற்றக்கூடிய ஆற்றல் எவ்வளவுதான் இருப்பினும், அறுவை முறைக்கு இருக்கக் கூடிய பளபளப்பும், விளம்பரமும் வேறு எம்முறைக்கும் இருக்க முடியாது. மாத்திரையாலோ அல்லது ஊசியாலோ நோயைக் குணமாக்குவதைவிட அறுவை முறையால் குணமாக்குவதற்கு மக்கள் மனத்தில் ஒரு தனிஇடம் இருக்கத்தான் செய்கிறது. ஒரே வெளிச்சமான, பளபளப்பான அறுவை நடக்கும் இடத்தையும், வெள்ளை வெளேரென்று உடை அணிந்த மருத்துவர்களையும், பணியாட்களையும், தகதக என்று மின்னும் அறுவைக் கருவிகளையும் பார்க்கும் எவர்தாம் மயங்கார். அம் முறைபற்றி உயர்வாக நினையார்.

இளமை பெறல் என்பது பெரும்பான்மையும் பால் தொடர்பு உடையது என்ற பிழைபட்ட எண்ணம் பொது மக்கள் மனத்தில் நிலைத்து உள்ளது. ஆகவே பழுதுபட்ட கலவி உறுப்பின்மேல் அஃதாவது வித்தின்மேல் பளபளப்பான கத்தி செல்லும் பொழுது, வெறுமனே, மாத்திரைகளை விழுங்குவதைவிட, ஊசி போட்டுக் கொள்வதைவிட, அறுவைமுறைதான் உடனடியாக நன்மை பயக்க வல்லது என்ற நினைப்பு நோயாளியின் மனத்தில் நன்கு பதிந்து விடுகிறது. அத்துடன் அறுவைமுறை மருத்துவர்களுக்கோ, மற்றமுறை மருத்துவர்களைவிட, சொல்ல முடியாத விளம்பரம் இருப்பினும் இன்றைய நிலையில், அறுவைமுறை, உறுப்புமுறை மருத்துவத்திற்குப் பக்கத்தில் நிற்க முடியுமா என்றால் ஐயமே. ஏனெனில் உறுபபுமுறை மருத்துவத்தின் எல்லையைவிட அறுவை முறை எல்லை மிக மிகக் குறுகியது. பால் சுரப்பிகளை அறுவை மருத்துவர்களால் மிக மிக எளிதில் அணுக இயலும்தான். பால் கோளாறுகள் பால் சுரப்பிகளில் ஏற்படும் கேடுகளால் மட்டும் ஏற்படுவன அன்றே. 'பிட்யூட்டரி'யும் கோளாறுக்குக் காரணமாக இருக்கலாம். அறுவை மருத்துவர்களால்'பிட்யூட்டரியை'அணுக முடியுமா.? நோயாளியின் உயிரை அன்றோ பணயம் வைக்க வேண்டும். உறுப்புமுறை மருத்துவம் அவ்வாறு அன்றே. குறைவாய் உள்ள வேதிச்சுரப்பி, உடலில் எங்குதான் அமைந்திருக்கட்டுமே, கவலையே

இல்லையே! மருத்துவம் செய்ய இயலுமே; இதற்காக நாம் அறுவை முறையின் ஆற்றலைக் குறைவாக மதிப்பிட வேண்டாம். இந்த இரண்டு முறைகளையும் பின்னிப் பிணைத்து ஒரு புதிய முறை கண்டு பிடித்தால் அம்முறை உண்மையிலேயே ஓர் உயர்ந்த முறையாக இருந்தாலும் இருக்கலாம்.

இளமையாக்கும் மருத்துவத்தில் சிக்கல் என்னவென்றால், நோயாளி மருந்து உட்கொண்ட சில நாள்களுக்குள்ளாகவே நோய் நலமாக வேண்டும், காளைபோல் துள்ளி விளையாட வேண்டும் என நினைப்பதுதான். இது நடக்கக் கூடியதா? இருப்பினும் இம் மருத்துவத்தால் கிழவர்களின் உடல்நிலையில் குறிப்பிட்ட முன்னேற்றம் ஏற்படத்தான் செய்கிறது. சுறுசுறுப்பாக வேலை செய்ய இயலுகிறது. எதிர்காலம் பற்றி நம்பிக்கை பிறக்கிறது. காளைபோல் துள்ளித் திரிய ஆவலுடைய கிழவருக்கு இந்த முன்னேற்றம் எந்த மூலைக்கு! எல்லாவற்றிற்கும் மேலாக தம் இளவயதில் இருந்த ஆண்மை திரும்பக் கிடைக்க வேண்டும் என விரும்புகிறார். அவர் வயதிற்கொத்த சுறுசுறுப்பு, ஆண்மை ஆகியவைகளுடன் மட்டும் அவர் மனநிறைவு கொள்வதில்லை. இருபது அகவைக்காளைக் குறிய ஆண்மையும் கிளர்ச்சியும் தமக்கு வேண்டுமென விரும்புகிறார். ஒருமுறை அவருடைய கலவி ஆற்றல் வலுப்பட்டால் போதும், தம் அகவையை மறந்து, புகுந்து விளையாடி விடுகிறார். எந்த நேரமும் புணர்ச்சியிலேயே உழல்வதால், மருத்துவம் செய்வதற்குமுன் எந்த நிலை இருந்ததோ அதைவிட கீழான நிலை ஏற்படுகிறது. மூப்பினால் வலுவிழந்த நெஞ்சாங்குலை, குருதிக் குழாய்கள், சிறுநீர்ப்பிரிப்பான்கள் முதலிய உறுப்புகளுக்கு வேலைப்பளு மிகுதியாக்கப்படுவதால்தான் முன் கூறிய கீழான நிலை ஏற்படுகிறது. ஆகவே கிழவர்கள் இளமை பெற்றால் மிக மிக உன்னிப்பாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இளமை ஓடிப் பறந்துவிடும்.

பால் அலித்தன்மையைச் சரி செய்வதற்கும், சுருங்கிய பால் தன்மையைச் சரி செய்வதற்குந்தாம் அறுவைமுறை பயன் படுகிறது. உறுப்புமுறை மருத்துவமோ எல்லாவகை கலவிக் கோளாறுகளுக்கும் பயன்படுகிறது. அறுவை முறையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று வித்து ஒட்டுமுறை அல்லது வித்து இடமாற்றுமுறை. மற்றொன்று நாளத்தறிப்புமுறை அல்லது நாளமுடிப்புமுறை தொடக்கத்தில் இம்முறைகள் வானளாவப் புகழப்பட்டன. செய்தித் தாள்கள் இம் முறைகளால் உண்டாகும் நன்மைகள் பற்றி பத்தி பத்தியாக வரிந்து தள்ளின. அவர்கள் எதிர்பார்த்த அளவு வெற்றி கிட்டியது. அமைதியாக எண்ணுவோமாயின் அறுவை முறைக்கு, இளமையாக்குவதில் உறுப்புமுறை மருத்துவத்திற்கு உரிய இடம் போன்ற ஓர் இடம்

உண்டா என்ற ஐயம் எழாமல் இராது. புதிய வித்தின் ஒரு பகுதியை, அலித்தன்மை உடைய கிழவரின் வித்துடன் ஒட்டும் முறைக்கு அல்லது நல்ல வன்மை உடைய முழுவித்தை, சுருங்கி விட்ட வித்திற்குப் பகரமாக இடமாற்றும் முறைக்கு "வரோனாப்பின் அறுவைமுறை" எனப் பெயர். வரோனாப் என்ற உருசிய நாட்டு அறுவை மருத்துவர்தான் 1919இல் இம்முறையை முதன்முதல் பெரும் அளவில் கைக் கொண்டார். வன்மை உடைய இளைஞனின் வித்தை ஒட்டுச் செய்தால் நல்ல பயன் கிடைத்தாலும் கிடைக்கலாம். இளைஞனின் வித்திற்கு எங்கு போவது. இக்கட்டுகளில் அகப்பட்டு உயிர் இழந்த இளைஞர்களின் வித்துகளை வேண்டுமானால் பயன் படுத்தலாம். அப்படிப் பயன்படுத்திப் பார்த்ததில் நல்ல பயன் கிடைத்திருப்பதாக மருத்துவர்கள் சிலர் எழுதி உள்ளார்கள். சிலர் ஒட்டுமுறையால் ஏற்படும் நன்மை நிலையானதன்று; தற்காலிக மானதுதான் என அறிவித்துள்ளனர். நடுநிலையினின்று ஆராயின் இம்முறையை கைக் கொள்ள வேண்டிய முறைப்படி கைக் கொண்டால் வெற்றி கிட்டாது போகாது.

வரோனாப், இளமையான, சுறுசுறுப்பான வாலில்லாக் குரங்குகளின் வித்தை, ஒட்டுக்குப் பயன்படுத்தினார். வாலில்லாக் குரங்குகள், உடல் அமைப்பிலும், உடல்உறுப்புகளின் வேலைகளின் தன்மைகளிலும் மாந்தர்களை ஒத்திருக்கின்றன. அதனால் அவற்றின் வித்துகள் மாந்தர்களுடைய வித்துகளின் குறையைச் சரிக்கட்ட முடியும் என நம்பினார். உண்மையைச் சொல்லப் போனால் மாந்த வித்தைவிட குரங்கின் வித்து எளிதாகக் கிடைக்கும் என்ற ஓரே ஒரு காரணத்தால்தான் வரோனாப் குரங்கின் வித்தைப் பயன் படுத்தினார். வரோனாப் அறுவைமுறை, குரங்குச்சுரப்பி அறுவை முறை எனவும் அழைக்கப்படும். அறுவைமுறையில் கையாளப்பட வேண்டிய எல்லா வகையான தூய்மைகளுடன், வாலில்லாக் குரங்கின் வித்துகளை எடுத்து, நோயாளியின் வயிற்றிற்குள் அல்லது வித்துகளின் பைக்குள் வைத்துத் தைத்து விடுகிறார்கள். சுருங்கிவிட்ட முழுவித்திற்குப் பகரமாக வேறு ஒரு வித்தை வைத்துத் தைக்கிறார்கள். அல்லது வித்தைச் சீவி, ஒருதுண்டை மட்டும் நோயாளியின் வித்தைச் சுற்றி வைத்துத் தைத்து விடுகிறார்கள் சீவப் பட்ட இத்துண்டு நோயாளியின் வித்தின் ஒரு பகுதியாக வளர்ந்து, வித்தின் வேலைகளில் பங்கை எடுத்துக் கொள்ளலாம் என நம்புகின்றனர். இந்த ஒட்டு, வித்தோடு வித்தாகக் கலந்து விடுகிறது இதைச்சுற்றி புதிய குருதிக் குழாய்கள் உண்டாகின்றன. இப் புதிய சுற்றுப்புறத்தில் இந்த ஒட்டு, சிறிது காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு (வழக்கமாக சிறிது காலத்திற்கே) உயிருடனும் வன்மையுடனும் இருக்கின்றது. இப் புதிய சுற்றுப்புறத்தில் இந்த ஒட்டு நன்றாகவே

Scanned with CamScanner

புதுப் பாடல்களில் 'அயற்சொல் கலப்பு' — ஓர் ஆய்வு!

கடலூர். ப. மணிமாறன், க.மு.

அண்மைக் காலமாகத் தமிழ்ப் பாவலர்களில் பலர் மரபுப் பாடல்களை யாக்க மறந்தவர்களாய் அறியாதவர்களாய் புதுப் பாடல்களை நிறைய எழுதி வருகின்றனர். அப் பாடல்களில் பிறமொழிச் சொற்களின் வல்லாண்மைப் போக்கு விஞ்சி நிற்பது மொழிநலன் விழைவோர்க்கு ஏமாற்றத்தையும் வெறுப்பையும் ஒருசேர அளிப்பதாகும். மொழியின் தூய தன்மையை நிலைநிறுத்த மறுப்பது இலக்கியத் தொண்டன்று. மொழிக்குச் செய்யும் இரண்டகம் ஆகும்; புதுப்பாடல் பற்றிய பலரின் மதிப்பீடுகளை ஆய்வதும் புதுப்பாடல்களின் இடையிடையே விரவிக்கிடக்கும் 'அயற்சொல் கலப்பு' பற்றி ஆய்வதும் இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும்.

படிப்போரை மயக்குவதும் பொருள் புரியாமல் தடுமாறச் செய்வதுமாகிய புதுப்பாடலுக்குக் காலத்தை வென்று நிற்கும் ஆற்றல் கிடையாது என்பது பலரின் முடிவாகும். பிரான்சு நாட்டிலிருந்து ஆங்கில நாட்டுக்கு இறக்குமதியான புதுப்பாடல் தமிழிலக்கிய அங்காடிகளில் இன்று மலிவுச் சரக்காகிவிட்டது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தழைத்து, வளர்ந்து நாம் விரும்பிய முடிவைக் கொடுத்தாலும், சில காலத்திற்குப்பின் ஒன்று அஃது உடலினுள் உறிஞ்சப்படுகின்றது; அல்லது அதைச் சுற்றித் தசை நார்கள் உண்டாகி, அதன் வேலையைச் செய்ய ஒட்டாது தடுக்கின்றன.

வரோனுப் இந்த அறுவை முறையை முதன் முதலாகக் கைக்கொண்டபொழுது, மாந்தர்களை நான்குவகைக் குருதிப் பிரிவுகள் உடையவர்களாகப் பிரிக்கலாம் என்பதை அறியார். ஒருவரின் குருதியை மற்றொருவரின் உடலினுள் செலுத்தும்பொழுது குருதிப் பிரிவு பார்க்கப்பட வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். பிழை ஏற்படின் பல கேடுகள் ஏன் சாவுகூட, நேரிடலாம். இக் குருதிப் பிரிவு கண்டுபிடிக்கப்பட்டபின், வரோனுப் அறுவை முறை வெகுவாகச்சீர்பட்டது என வரோனுப் கூறினார். ஆண்களுக்குச் செய்தது போன்றே பெண்களுக்கும் பழைய சூற்பைக்குப் பகரமாக புதிய சூற்பைகளை வைத்துத் தைத்தார். இம்முறையால் அவர் நினைத்த நன்மை கிட்டியதாகக் கூறினார். இன்றைய மருத்துவ உலகம் வரோனுப்பின் அறுவை முறையை கடைசி படைக்கலமாகத்தான் கருதுகிறது. ஏன் எனில், அம்முறையின் வெற்றியில் இன்றைய மருத்துவ உலகிற்கு முழு நம்பிக்கை கிடையாது.

(தொடரும்)

எதையும் ஆழ்ந்து படிக்க விரும்பாதவர்கள் மட்டுமே சுவைக்கும் மின்னல் உருவகத் துணுக்குகளே புதுப்பாடல் (கவிதை) ஆகும்.

புதிய மொந்தையில் பழைய கள்ளைப் பருகத் தரும் புதுப் பாடல் படைப்பாளர்கள் ஒருவகையில் குமுகாய மாற்றத்தை முழுவீச்சில் காணத்துடிக்கும் புரட்சிக்காரர்கள் எனலாம். குமுகாய அமைப்பில் மேடுபள்ளம் இல்லாத சுரண்டல் இல்லாத மறுமலர்ச்சியை உருவாக்கும் கொள்கை வேட்கை மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

புதுப்பாடலை 'உரைவீச்சு' என்று முனைவர் சாலை. இளந்திரை யன் குறிப்பிடுகிறார்.

'விரும்பும் வீச்சில் சொல்லத் தடுத்தலின்
அரும்பும் பாவலர் அமைத்தது புதுப்பா' (1)

என்று புதுப்பாடலின் இலக்கணத்தை வரையறுக்கிறார். இலக் கணப் புலவர் த.ச. தமிழன், மேலும் அவர் பாவகையை அறு வகைப்படுத்தி, (அசைப்பா, தளைப்பா, புதுப்பா, திரைப்பா, இசைப்பா, ஒலிப்பா) புதுப்பாடல் வேறு, உரைப்பா வேறு என்கிறார்.

'இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்தல், தனிமொழிச் சேனை, பண்டிதபவனி இவை எதுவும் இல்லாத கருத்துகள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக்கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை' (2) என்று விளக்கம்தரும் பாவலர் மு. மேத்தா, இலக்கணம், யாப்பு, எதுகை, மோனை, எதுவும் புதுப்பாடலுக்குத் தேவையில்லை என எண்ணுகிறார் போலும்.

நா.காமராசன், மு.மேத்தா போன்றோர் தங்கள் பாடல்களில் வலிந்து வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களுக்கு அடைக்கலம் தருகின்றனர். நா. காமராசனின் 'குடிகாரன்' பற்றிய பாடலில் இடம்பெறும்,

'மதுவே!...... ராஜதிரவமே!
மகா கவிகளின் தாய்ப்பாலே'

'மாளிகைக்குப் பெர்மிட்டு
சேரிக்கு மட்டும் கைவிலங்கு' (3)

என்றும், 'விலைமகளிர்' பற்றிய பாடலில்

'நாங்கள் அடிமைகள்
அதனால் தான்
எங்கள் சாம்ராஜ்யத்தில்
சூரியன் உதிப்பதுமில்லை
அஸ்தமிப்பதுமில்லை' (4)

என்றும், 'ஒரு சேரிக்கிராமமும் தபால்காரரின் மரணமும்' என்ற பாடலில்,

Scanned with CamScanner

'மசானத்துத் தீ கூட
தபால் பெட்டி நிறமிருக்கும்
ஜனங்களெல்லாம் கடுதாசி
ஜனன மரணம் தபால்காரர்' (5)

என்றும் பாடியிருப்பதில் இருந்து பிறமொழிச் சொற்களுக்குப் பாவலர் எத்தகைய 'விருந்து' படைத்துள்ளார் என்பது நன்கு புலனாகும்.

மு. மேத்தாவின் 'சொற்களை'ப் பற்றிய பாடலில் இடம் பெற்றுள்ள

'ராஜாப்பூ என்கிற
ரோஜாப்பூச் செடிகூட
ராஜனுமாக் கொடுத்துவிட்டு
தண்ணீர்க் கூஜாவுக்குப் பின்போய்க்
குனிந்து கொண்டது' (6)

என்ற பகுதியும் 'கண்ணீர்ப் பூக்களில்' இடம்பெற்றுள்ள

'அரசியல் வாழ்க்கையில்
சில கோமாளித் தலைவர்கள்
தேசத்தையே குட்டிச் சுவராக்கி
அதில் 'வால்போஸ்டர்' ஒட்டுகிறார்கள்' (7)

என்னும் வரிகளும், பாவலரின் பாடல்களில் ஆங்கிலச் சொல்லும் வட சொற்களும் எந்த அளவில் சிறப்பிடம் பெறுகின்றன என்பதற்குப் போதிய சான்றுகளாகும். இவைபோன்ற பாடல்களாலேயே பாவலர் இளந்தேவன்,

'மோகம் கிறுக்கும் மோகக் கிறுக்கர்கள்
மூளைக் கட்டியால் பிதற்றும் அசடுகள்!
மேடைகள் தோறும் மேனி மினுக்கும்
ஆடை அவிழ்ப்பு நாட்டியக்காரர்கள்
வடமொழிச் சொற்களை வலியப் புகுத்தும்
கலப்படக் காரர்கள்! கள்ள வணிகர்கள்!' (8)

என்று மிகவும் கடுமையாகப் புதுப்பாடல் எழுதுவோரைச் சாடுகிறார்.

இனி புதுப்பாடல் பற்றிப் புதுப்பாடல் எழுதுவோரின் மதிப்பீட்டையும் ஏனைய பிற அறிஞர்களின் கருத்துகளையும் இவண் நோக்குவோம்.

'சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம், பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்த ஆழமுடைய சந்த நுட்பம் கண்டக் காய்ச்சிக் கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு, உள்ளடக்கமே வார்ந்து அமையும் உத்திப் புதுமை இவை எல்லாவற்றையும் விடப் புதிய பார்வை, புதிய உள்ளடக்கம் இவை புதுக்கவிதையில் அவசியத் தேவைகள்' (9) என்கிறார் அப்துல் ரகுமான்.

'நெருப்பு நிமிடங்களில் இருந்து நிகழ்காலத்தை மீட்டு எதிர் காலத்தை எழுப்பப்போகும் இளம் உள்ளங்களில் ஒரு பிறழாத சமூகப் பிரக்ஞையை ஏற்படுத்தப் போவதாகப் பாவலர் வைர முத்து சூளுரைக்கிறார். மேலும் சமூகத்தின் காயங்களுக்குக் கட்டுப் போடுதற்குக் காவியப் பகுதிகளை விட புதுப்பாடல் என்னும் கைக்குட்டைகளே கச்சிதமானவை' (10)என்றும் உறுதி படக் கூறுகிறார். இவரது உரைநடையை உரைப்பா(வசன கவிதை) என்று கொள்ளலாம்.

'காந்தமாய் இருந்து கவர்ச்சிப்பதைவிடக் கந்தகமாய் மாறிக் கனன்று வெடிக்கவே விரும்புகின்றன என் பாடல்கள்' (11) என்கிறார் பாவலர் பொன். செல்வகணபதி, மேற்கூறிய பாவலர்கள் அனைவருமே சிறந்த மரபுப் பாக்களைப் படைக்கும் திறனும் பெற்றவர்கள் ஆவார்கள்.

பகுத்தறிவுப் பார்வையும் பொதுவுடைமை உணர்வும் இவர் களின் நெஞ்சில் ஆட்சி செய்வதை எவரும் மறுக்க இயலாது. சொற்செறிவு பாடலுக்கு மெருகூட்டும்; வெறும் சொல்வீச்சு அழகு ஊட்டாது'

'உள்ளத்தின் குமுறலே பாடல்' என்பார் வோர்ட்சு வொர்த். 'உள்ளத்துள் உள்ளது கவிதை; இன்ப உருவெடுப்பது பாடல்' என்பார் கவிமணியும். 'சொற்களைச் சிறந்தமுறையில் வைப்பது உரைநடை' என்றும், 'சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப் பதுபாட்டு' என்றும் கோலரிட்சு என்னும் மேனாட்டறிஞர் கூறுவார். இக்கூற்றுகள் யாவும் புதுப்பாடலை மதிப்பீடு செய்யப் பெரிதும் துணைபுரியும்.

'உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் சிறப்பான முதலிடமும் ஒலி நயத்துக்கும் யாப்புக்கும் அடுத்த இரண்டாம் இடமும் எதுகை முதலியவற்றிற்கு மூன்றாம் இடமுமே கொடுத்துப் பழம் புலவர்கள் பாட்டுக் கலையை வளர்த்தனர்' (12) என்று மு. வ. அவர்கள் தம் ஆய்வில் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்.

வெறும் உவமைகள், உருவகங்கள் மட்டுமே உள்ளடங்கிய பொருள் தெளிவற்ற ஒருவகைப் பிதற்றல் மொழிகளாகவே புதுப்பாடல் புலப்படுகிறது. குமுகாயத்தில் மலிந்துள்ள கேடுகளைத் திறந்த மனத்துடன் நையாண்டி செய்யும் கோணங் கிக்காரர்களாகத் திகழும் இவர்கள், அவற்றைக் களைந்தெறிய ஆய்வுகளுக்குத் தீர்வுகளாக எவற்றைக் காட்டுகிறார்கள் என்பதே இவர்கள் முன் தொடுக்கப்பெற்றுள்ள வினாக்களையாகும். மாந்த இனத்தை ஈடேற்றும் நம்பிக்கைக்குரிய புதிய வழிகள் இவர்களின் கண்களில் படுவதில்லை. குறைகூறுவதிலும் குற்றங்களை மிகைப் படுத்துவதிலும் இவர்களுக்கு நிகர் எவருமிலர்.

'இவர்களது சோக ஓலங்களும், நம்பிக்கை வறட்சி ஒப்பாரி களும் சாவுக்காதல் கீதங்களும் வாழ்க்கை மறுப்புப் பாடல்களும் நல்வாழ்வுக்காக நம்பிக்கையோடு போராடும் மக்களுக்குச் சிறிதும்

Scanned with CamScanner

தேவையற்றவை. இவர்களின் புதுக்கவிதைகளில் புதுமையுமில்லை; கவிதைத் தன்மையுமில்லை; புரட்சியுமில்லை. இவை வாழ்க்கைப் போராட்டத்திற்குப் பயந்து சுவை விரும்பும் பலவீன மனிதர்களது கூக்குரல்தான்' (13) என்று பேராசிரியர் நா. வானமாமலை குறிப்பிடுவது பொருத்தமாகவும் உண்மையாகவும் தோன்றுகிறது.

மண்மாண் புனைபாவையின் எழில் நலம் போல இயங்கும் புதுப் பாடலின் வரிகளில் சில, சிலரால் முணுமுணுக்கப் பெறுகின்றன. அளவிறந்த பாராட்டுதல்களையும் பெறுகின்றன. உயிரும் உணர்வும் அமைவதோடல்லாது மாந்த நலனுக்கு உருவமும் இன்றியமையாததுபோல ஒரு வரையறைக்குள்ளான வடிவம் கழகக் காலத்திலிருந்து முறையாகப் பேணப்பட்டு வருகிறது. நடை உடைகளில் புதுமையை விழைவதுபோல் இலக்கிய நெறியிலும் இத்தகு புதுமையல்லாப் புதுமையை விரும்புவோர், அரங்கம் இல்லாமல் ஆட முயல்வதுபோலப் பாடலின் உயிர் மூச்சாகிய யாப்பு வடிவத்தைத் தகர்த்தெறியத் துடிக்கின்ற முனைப்பின் அடிப்படைகள் விளங்கவில்லை. இப் பாடல்களில் சிலவற்றில் காணப்படும் கற்பனைகளையும் உணர்ச்சிகளையும் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை.

பாடலைப் பற்றிப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் குறிப்பிடும் அளவுகோல் அறிஞருலகால் ஏற்றுக் கொள்ளத்தக்கவொன்றாகும்.

'ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல் ஒழுங்கான கட்டுக்கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது. பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலியொழுங்கு. உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை நுண்ணோக்கு, இயற்கை ஈடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல் நடுநிலைமை, துணிவு என்பனவாகும்.'

'இதற்கேற்பவே ஒவ்வொருவரின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்களின் கருத்தை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்' (14) என்பது பாடலின் சரியான உரைகல்லாகும்.

'இலக்கியம் வாழ்க்கையின் காலக் 'கண்ணாடி' என்பதற்கேற்ப மக்களை நெறிப்படுத்தி, அறிவுறுத்தும் சீரிய சிந்தனைகளைக் கருக்கொண்டு சிறந்த உணர்வுகளைத் தாங்கி உறையினின்றும் உருவிய போர்வாள்களாகப் பாடல்கள் உலா வருதல் வேண்டும்.

'மனிதனாக வாழ்ந்திட வேண்டும் மனத்தில் வையடா' 'தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா'(15)என்பன போன்ற மொழிக்கலப்பில்லாத எளிமையான வரிகளில் எத்தகைய உணர்வார்ந்த கருத்துகளைப் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் போன்றோர் பாடியுள்ளனர் என்பதைப் புதுப்பாடல் சிற்பிகள் கூர்ந்து நோக்க வேண்டும்.

சோக முனகல்கள், துன்பக்குமுறல்கள் ஆகிய இயலாமைச் சிந்தனைகளில் இருந்து மீட்டுப் போராடும் புரட்சியுணர்வைத் தரக்கூடிய வலிமைவாய்ந்த வரி மலர்களே பாடல் முடிவுரை:-

'அயற்சொல் குறைத்துப் பாலியல் தவிர்த்தால்
முயற்சி சிறந்து முற்றுப் பெறுமே' (16)

என்னும் புலவர். த.ச. தமிழன் எழுதிய யாப்பு நூல் இலக்கணத் திற்கேற்ப, பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே திணிக்கும் உணர்வைக் கைவிட்டுப் பாலியல் செய்திகளைமட்டும் மிகுத்துக் கூறுவதைத் தவிர்த்தால் புதுப்பாப் படைப்பாளர்களின் முயற்சி சிறந்து நின்று தக்கதொரு மாற்றத்தை உரிய நேரத்தில் ஏற்படுத்தும் தரம் மிக்கதாய் விளங்கும்.

உலகம் அளாவிய உயர்ந்த கொள்கைநெறிக்கு உரிமையுடைய தமிழிலக்கியம் மேலும் செழுமையுறவும், மேனாட்டு மொழிகளில் வளர்ந்துவரும் திறனாய்வுப் போக்குகள் தண்டமிழ் மொழியில் தழைத்தோங்கவும் கூரிய சிந்தனைத் திறமும் நேரிய கொள்கை உரமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களாய் இன்றைய பாவலர் கள் விளங்கி, குமுகாய மாற்றத்திற்குத் துணைபுரிவார்களாயின் காலம் அவர்களை வாழ்த்தும். 0

அடிக் குறிப்புகள்

1. த. ச. தமிழன், யாப்புநூல் 81 பக்கம் 101
2. மு. மேத்தா, ஊர்வலம் 80
3, 4, 5, நா. காமராசன், கறுப்பு மலர்கள் 1971
6. மு. மேத்தா, முகத்துக்குமுகம் 1981
7. மு. மேத்தா, கண்ணீர்ப்பூக்கள் 1979
8. இளந்தேவன், கனவு மலர்கள் 1979
9. அப்துல் ரகுமான், அன்னம் 1976 பக் 6
10. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள் 1981
11. பொன். செல்வகணபதி, கைது செய்யப்பட்ட நியாயங்கள் 1979
12. மு. வ. இலக்கியத்திறன் 1965
13. நா. வானமாமலை, புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் 1978
14. பாவலரேறு பெருஞ்சித்திரனார், கனிச்சாறு 1979
15. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் 1980
16. த. ச. தமிழன் யாப்பு நூல் 1981 பக். 104

[இக்கட்டுரை 1984 சூன் 1, 2-ஆம் நாள்களில் தில்லியில் நிகழ்வுற்ற இந்தியப் பல்கலைத் தமிழாசிரியர் மன்றத்தின் பதினாறாவது கருத்தரங்கில் படிக்கப்பெற்றது. மன்றம் வெளியிட்ட ஆய்வுக்கோவை தொகுதி-2 நூலிலும் இடம்பெற்றுள்ளது.]

Scanned with CamScanner

(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும் விரிவான மதிப்புரைக்கு ஐந்து படிகளும் அனுப்ப வேண்டும்)

1. குறளும் பொருளும்

ஆசிரியர் : இறையரசன்
வெளியீடு : மணிமேகலை பதிப்பகம், சின்ன தாராபுரம் — 639202, கரூர் வட்டம்.
பக்கங்கள் : 312. விலை: உரு. 12.50

இந்நூல், திருக்குறளுக்கு விளக்கமாக அமைந்த ஒரு புதுமை நூலாகும். அனைத்துக் குறட்பாக்களுக்கும் உரிய பொருளை, (சில பொருள்கள் புதுமையாக உள்ளன) எண்சீர் மண்டில இரண்டு அடிகளில் எளிய, இனிய பாடல் அமைப்பால் விளக்குகிறார் ஆசிரியர். குறட்பா முன்னும் பாட்டுரை பின்னுமாகத் தரப் பட்டுள்ளன. பொருளுரைப் பாவிற்கு ஓர் எடுத்துக் காட்டு:

குறள் :

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (667)

பாட்டுரை :

உருள்பெரிய தேர்தாங்கும் ஆணி போன்ற
உறுதிமிக்கோர் இவ்வுலகில் இருப்ப தாலே
உருவத்தின் தன்மைகளை மட்டும் எண்ணி
ஒருவரையும் இகழாத பண்பு வேண்டும்.

புதுவுரைப் பாவிற்கு ஓர் எடுத்துக் காட்டு :

குறள் :

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (9)

பாட்டுரை :

அன்பறிவு பணிவொழுக்கம் இன்சொல் வீரம்
அறம்புகழ்என் றெண்குணத்தோன் தாள்வணங்கான்
சென்னியது குறிக்கோளே இல்லா தேகும்
*சிறந்தபொறி ஐந்தினிலும் பயன்கள் இன்றே!

நூலைப் பாராட்டிப் பாவலரேறு தந்த வாழ்த்துரை இது!

உரைப்பாக்கள் பாநலமும் செழுஞ்சொற் கட்டும்
ஒட்பமுடன் தூய்தமிழும் செறிந்து நின்று,
வரைப்பாங்கு கொண்டிலங்கிக் கற்பார் உள்ளம்
வயப்படுத்தும் திறன்சான்று நிற்றல் கண்டோம்!
விரைப்பாளும் புனைவுலகில் புன்மை கூறும்
வெறுநூல்கள் பொலபொலவென மொய்க்கும் போதில்
நிரைப்பாளும் அறநூல்கள் பேணுகின்ற
நிறைநெஞ்சப் புலமையினை வாழ்த்து கின்றோம்!

2. காட்டாறு

ஆசிரியர் : இலாலாப்பேட்டை ம. புகழேந்தி
வெளியீடு : செயராம் அச்சகம், திருச்சி-2.
பக்கம் : 36. விலை : 0. 50 காசு.

1965-இல் நடந்த இந்திப் போராட்டப் பின்னணியில் தீட்டப்பெற்ற தீந்தமிழ் ஓவியம் இது!

இந்தி எதிர்ப்புப் போரில் சிறைப்பட்ட ஒருவன் மீண்டு வந்து தான் விரும்பிய காதலி கைம்பெண்ணாய் நின்ற காட்சி கண்டு மனம் பதறிப் பல்வகை எதிர்ப்புகளையும் கடந்து மணம் செய்து கொள்ளும்—வகையில் எழுதப்பெற்ற சிறு கதை. அழகிய தூயதமிழ் நடை. ஆசிரியரை வாழ்த்துகின்றோம்.

3. சிவப்பு நிலா (சிறு புதினம்)

ஆசிரியர் : மறத்தமிழ்வேந்தன்
வெளியீடு : நிகரமைப் பதிப்பகம்—678—வீதியெண் 20,
வியாசர்பாடி, சென்னை—39.
பக்கம் : 75. விலை. உருபா 4.

சாதி, மத ஒழிப்பு, சுரண்டலற்ற குமுகாய அமைப்பு பெண்கள் விடுதலை ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பெற்ற சிறியதொரு புதுப்புனைவுக் கதை நூல் இது. தூய தமிழில் அழகிய நடையில் எழுதிய ஆசிரியரைப் பலவகையிலும் பாராட்டு கின்றோம். இக்காலத்தில் வெளிவரும் அருவருப்பான கதைகளுக் கிடையில் குமுகாய மறுமலர்ச்சி வேண்டி எழுதப்பெற்ற இது போலும் கதைநூல்கள் நிறைய வரவேண்டும். ஆசிரியரைப் பாராட்டுகின்றோம்.

4. மழலை நெஞ்சம்

ஆசிரியர் : பாவலர். வ. சிவசங்கரன் க.இ,
வெளியீடு : வளர்மதி வெளியீடு. 44 பெரியதெரு கானக்கோவில்
பேட்டை, திருக்கழுக்குன்றம்-603 109
பக்கம் : 40. விலை: 1-50.

அனைத்துலகச் சிறுவராண்டின் நினைவு (1979) வெளியீடு இது. இனிய. எளிய, அழகிய 32 குழந்தைப் பாடல்கள் இந் நூலில் உள்ளன. பெரும்பாலான பாடல்கள் ஒரே சந்தத்தில் இயலுகின்றன. சிறுவர்களுக்கு நாட்டுத்தலைவர்கள் பலரை அழகுற அறிமுகப்படுத்துகின்றார்.

Scanned with CamScanner

செய்திகள்

1. கிண்டி-பொறியியற் கல்லூரி-சென்னை-25, தமிழ் மன்ற நிறைவு விழா :

கடந்த தி.பி. 2015 மீனம் 22 (4-4-84) அறிவன் கிழமை, சென்னை, கிண்டி, பொறியியற் கல்லூரியில், தமிழ் மன்ற நிறைவு விழா அன்று மாலை 4-30 மணியளவில் நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு பர். ஒளவை நடராசன் தலைமையேற்றார் திரு. பா. இளங்கோ (தமிழ் மன்றத் தலைவர்) வரவேற்புரையாற்றினார். திரு. கி. பகலவன் ஆண்டறிக்கை படித்ததற்குப், பின்னர் தலைமையுரை நிகழ்ந்தது. அடுத்து 'கம்பன் பாநயம்' என்னும் தலைப்பில் பர். இ. சுந்தரமூர்த்தி அவர்களும், 'பாடல் இன்பம்' என்னும் தலைப்பில் திருவாட்டி நிர்மலா சுரேசு க.மு. அவர்களும் கருத்துரையாற்றினர். இறுதியில் 'புரட்சிப் பாவலரின் சொல்லாட்சி' என்னுந் தலைப்பில் பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்கள் சிறப்புரையாற்றினார். திரு ந. பிச்சை முத்து அவர்களின் நன்றியுரைக்குப்பின் விழா இனிது நிறைவுற்றது.

(கடந்த 6-4-84 முதல் 15-4-84 வரை உ.த.மு.க. சார்பில் ஆசிரியரின் நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவு நிகழ்ந்தது. அது தொடர்பான நிகழ்ச்சிகளைத் 'தமிழ்நிலம்' இதழில் காண்க.)

(அதன்பின்னர் மே 5, 6-ஆம் நாள்களில் தெ.ஆ. மாவட்டம் பெண்ணாடத்தில், பொதுவுடைமை மக்கள் போர் இயக்கத்தலைவர் புலவர் கலிய பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற, 'தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடும்' 'இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை மாநாடும்' நடைபெற்றன. இரண்டு நாள் மாநாடுகளிலும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்து கொண்டனர். பாவலரேறு அவர்களுடன், சொல்லாய்வறிஞர் அருளி, தென்மொழி நா. இளமாறன், மா செ தமிழ்மணி, புலவர். குமர. தன்னொளியன், பல்லடம் ஆறுமுகம், தென்மொழி ந. முத்துக்குமரன், பறம்பை அறிவன், தாமரைக்கோ, வினைதீர்குன்றன் முதலிய ஐம்பதிற்கும் மேற்பட்ட தென்மொழி அன்பர்களும் கலந்து கொண்டனர். இது தொடர்பான செய்தி 'தமிழ்நிலம்' இதழில் வெளிவரும்.)

2. சாமிநாதன்-மலர்க்கொடி வாழ்க!

கடந்த மேழம் 31 (13-5-84), திருச்சி மா.வ. பொன்பரப்பி அருகில் உள்ள செருகளத்தூரில், காலை 7 மணியளவில், சென்னை, பெருநகர் குடிநீர் வாரியத்தில் பணியாற்றும் செல்வன் இர. சாமி நாதன் வணி.இ. அவர்களுக்கும், செல்வி. இரா. மலர்க்கொடிக்கும்,

Scanned with CamScanner

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருமணம் நடைபெற்றது தொடக்கத்தில் சுவை. மருதவாணன் க.மு., கல்.இ. வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் சொல்லாய்வறிஞர் ப. அருளி, பேரா. கே சாயிராம், க.மு. ஆ. அரிமாப் பாமகன் க.மு, பர். இராசேந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இறுதியில் பாவலரேறு அவர்களின் சிறப்பு வாழ்த்துரைக்குப் பின்னர், திரு. பெ. சண்முகசுந்தரன் நன்றி நவிலவும், இனிய விருந்திற்குப் பின்னரும் மணவிழா நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

3 வேலாயுதம்-செல்வி வாழ்க!

கடந்த 13-5-84 ஞாயிறு காலை 11 மணியளவில் பொன்பரப்பி, செருகளத்தூரில் செல்வன். வேலாயுதம் அவர்களுக்கும், செல்வி. செல்விக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், தமிழர் திருமணம் நடந்தேறியது. மணமக்களை வாழ்த்திச் சொல்லாய்வறிஞர் ப. அருளி, பர். இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். திருமா. பன்னீர்ச்செல்வம். அறி.து. நன்றியுரைக்குப்பின் மணவிழா இனிது நிறைவேறியது.

4. சாமி-தங்கராசு-கலைமதி வாழ்க!

கடந்த திபி. 2015 விடைத்திங்கள் 21-ஆம் நாள் ஞாயிறு அன்று காலை 8 மணியளவில், செயங்கொண்டம் வட்டம், குவாகம், மணமகள் இல்லத்தில், நெடுநாள் தென்மொழி அன்பரும், செயங்கொண்டம் உ.த.மு.க. தலைவரும் ஆகிய திரு சாமி. தங்கராசு. க.மு. (வட்டாரப்புள்ளியியல் ஆய்வாளர், செந்துறை) அவர்களுக்கும், அரியலூர் தென்மொழி அன்பரும், ஓய்வுபெற்ற தமிழாசிரியரும் ஆகிய புலவர். இராம. அரங்கராசன் அவர்களின் மகள் செல்வி. கலைமதிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையிலும், செயங்கொண்டம் மூன்றாம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கோ. தியாகராசன் அவர்கள் முன்னிலையிலும் திருமணவிழா இனிதே நிறைவேறியது. மணமக்களை வாழ்த்தி, பெரியார் சமஉரிமைக் கழகச் செயலர் திரு. வே. ஆனைமுத்து, பெண்ணாடம் புலவர் கலியபெருமாள் (இ.பொ.க. (மா.இ.ல), உ.த.மு.க. துணை பொதுச் செயலர் தென்னவன்கோ, க.மு., சொல்லாய்வு அறிஞர் ப. அருளி வணி.இ., ச.இ., சா. கிருட்டிண மூர்த்தி, சி. பெரியசாமி. ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் மணமகன் திரு. சாமி தங்கராசு நன்றி நவின்றார். இன்சுவை விருந்திற்குப்பின் மணவிழா இனிது நிறைவேறியது.

5. த. இளங்கோவன்-மலர்க்கொடி-வாழ்க!

சென்ற 3-6-84, திருச்சி, செயங்கொண்டம், குவாகத்தில், காலை 11 மணியளவில், செல்வன் த.இளங்கோவன் அவர்களுக்கும்,

Scanned with CamScanner

செல்வி. மலர்க்கொடிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், திருமணம் இனிதே நிகழ்வுற்றது. மணமக்களை வாழ்த்தி, அறிஞர் ப. அருளி, தென்னவன்கோ, முதலியோர் வாழ்த்துரை வழங்கினர்.

6. உழவர் முன்னணியினர் பொதுக்கூட்டம் செந்துறை.

கடந்த 3-6-84 அன்று, மாலை 7 மணியளவில், திருச்சி மாவட்டம் செந்துறை, கடைத்தெருவில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, (மார்க்சிய - இலெனினியம்) சார்பில் உழவர் முன்னணியினர் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் பெண்ணாகடம் புலவர் கலியபெருமாள், பாவலரேறு பெருஞ்சித்திரனார், உ.த.மு.க. துணைப்பொதுச் செயலா திரு. தென்னவன் கோ, சொல்லாய்வறிஞர் திரு ப. அருளி, திரு. இர சேந்திரன் (தெ.ஆ. இளைஞர் முன்னணித் தலைவர்) முதலியோர் உரையாற்றினர். அனைவரும், தமிழ்த்தேசிய இனம் விடுதலை பெற வேண்டும் என்ற கருததை வெளிபபடுத்தினர். இரவு 1 மணி வரையிலும் சுற்று வட்டாரத்திலிருந்து வந்த உழவர் பெருங்குடி மக்களும, தொழிலாளர்களும் பேரளவில் திரண்டிருந்து, நிகழ்ச்சியில் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

7. அறிவொளி-மலர்விழி-வாழ்க!

சென்ற விடைத்திங்கள் 28-ஆம் நாள் (10-6-84) ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் புதுக் கோட்டை மாவட்டம், கொத்த மங்கலத்தில், நெடுநாளைய தென்மொழி அன்பரும், முன்னாள், காரைக்குடி, அழகப்பர் கல்லூரித் தமிழ்ப் பாசறை மாணவரும் ஆகிய சிவந்தபெருமாள் என்ற செல்வன்.அறிவொளி க மு(தமிழ்), க.மு (அரசியல்) கல் இ. அவர்களுக்கும், மு. கத்தூரி என்னும் செல்வி.மலர்விழிக்கும் (தொலைபேசி இயக்குநர், மதுரை), பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே நடந்தேறியது. நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் திரு குழ. செல்லையா அவர்கள் முன்னிலையேற்றார். அனைவரையும் திரு. ந, முருகேசன் க.மு. வரவேற்று உரையாற்றினார். மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள் குழ. செல்லையா, சொல்லாய்வறிஞர் ப. அருளி, சி. தமிழ்க்குமரன், புலவர் நா. தண்டபாணி, இரா. சோமசுந்தரம் க.இ. முதலியோர் நல்லுரையாற்றினர். இறுதியில் மணமக்களின் நன்றியுரையுடனும் இனிய விருந்துடனும் நிகழ்ச்சி நிறைவுற்றது.

Scanned with CamScanner

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

0: 1014 : பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

'தமிழ்ச்சிட்டு' இதழ் நெருநல் கிட்டிற்று; மகிழ்ச்சி. இதனை நிறுத்தும் முயற்சியில் திடுமென இறங்க வேண்டாம். தாங்கள் குறிப்பிட்ட நான்கு திங்களுக்குள் நிலைமை சீராகி விடுமென்பது என் திடமான எதிர்பார்ப்பு.

சிட்டின் நிலைவிளக்க அறிக்கையினை அச்சிட்டு, உறுப்பினர் களைச் சேர்த்து வருகின்றேன். அன்பர்களையும் அவ்வாறு செய்ய ஊக்குவித்துள்ளேன். — நா. எழில்மகிழ்நன், நெய்வேலி-1

0: 1015 : பெருஞ்சித்திரரே,

யாரெதிர் வரினும் எத்துயர் சூழினும்
பாருய்ந் திடவே பற்பல பாடிய
கழக அரிமாப் பாவலர் போன்றே
பழந்தமிழ்ப் புதுக்கித் தமிழ்க்குமு காயம்
சிறப்புறப் பற்பல செய்திடும் கோவே!
குறுநரி என்பேன் உனை எதிர்ப் போனை!
ஆயிர மாயிர அருந்தமிழ்ப் பாவலர்
பாயிர மாயுனைப் பாடியே வருகையில்
அவர்களைப் போற்றலும், அவர்த்திறன் மதித்தலும்
உவத்தலும் உன்தன் கடனென் பேன்யான;
— அதைவிடுத்தே,
இலச்சியம் பரப்பும் தென்மொழி இதழில்
பயனென் றில்லா மடல்களைப் பரப்பிக்
காணவும் ஏதோச் செய்திடு மாறே
கூனல் தனமாய் வெளியிடல் நன்றோ?
மடல்களைக் குறைத்தே வண்டமிழ்ப் பாவலர்
படைப்பினைப் பதிப்பித் திடுதல் வேண்டும்:
கூறிய யாவும் உம்நன் மைக்கே
தேறிய புலவீர் சிந்தனை செய்வீர்!

— புலவர். ந. மணிமொழி, இல.இ,
புதுப்பேட்டை, தெ. ஆ.மா.

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	45 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	4 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!

Scanned with CamScanner

படித்து வருகிறேன். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்திய இதழே தென்மொழி, ஆகும். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் காலம் காலமாகத் தொடர்ந்து வந்து தமிழ் மக்களிடையே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். மறைமலையடிகள், திருவாட்டி நீலாம்பிகை, திரு வி. க, பாரதிதாசன், தேவநேயப் பாவாணர் இவர்களைத் தொடர்ந்து உங்கள் தொண்டு தனித் தமிழ் இயக்கத்தில் எல்லோருடைய தமிழ்நெஞ்சங்களிலும் இடம் பெற்று வருகின்றது. உங்கள் தொண்டை மாணவர்களிடையே அடிக்கடி சொல்லி நீங்கள் இயற்றிய கனிச்சாறு, ஐயை, பள்ளிப் பறவைகள், இளமை உணர்வுகள் போன்ற நூல்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பேன். வாழ்நாள் உறுப்பினர் கட்டுபவர் பெயரையும், ஊரையும் தொடர்ந்து தங்களது மூன்று இதழ்களிலும் வெளியிட்டு மேலும் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்.

தங்கள் அன்பிற்குரிய,

— நா. அன்புச்செல்வன், க.மு.,கல்.இ;ஆ.ப.
திருப்பராய்த்துறை.

0: 1010 : மொழி நலம் பேணும் மதிநலம் வாய்ந்த தமிழ்க் கடல் பேராசிரியர் பாவலரேறு ஐயா அவர்களுக்குக் கதிர்வேலன் சொர்ணம் இயற்றும் அன்பு நிறைந்த மடல். இனிய வாழ்த்துகள்.

அண்மையில் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த பேராசிரியர் அ. புட்பரதம் அவர்களால் உங்களைச் சந்திக்க முடியவில்லை. அவர் என் சார்பில் ஓர் ஆண்டுக் கட்டணத்தைக் கொடுக்க இருந்தார். ஆனால் கொடுக்காமல் நமது தாயகத்திற்குத் திரும்பினார். இந்த முறை என் நண்பன் ஒருவன் மூலமாக 100 உருபா அனுப்பியுள்ளேன். இந்தப் பணத்தைக் கொண்டு தென்மொழிக்கு ஓர் ஆண்டுக் கட்டணம் எடுத்துவிட்டு, மிச்சமான சில்லறைக்குத் தாங்கள் இயற்றிய 'உலகியல் நூறு' என்ற நூலை எனக்கு வான்வாயிலாக அனுப்பும்படி உங்களிடம் பணிவன்புடன் வேண்டுகின்றேன். உடனே கிடைத்தால் சாலவும் நன்று. உங்கள் தமிழ்த் தொண்டுக்கு என் பாராட்டுகள் உங்களுக்கும் அருந்தமிழ்த் தொண்டர்களுக்கும் என் அன்புகனிந்த வாழ்த்துகளும் நன்றியும்.

— கதிர்வேலன், மொரீசியசு

0: 1011 : உலகத் தமிழ் உயர்வுக்கென உயிர்க்குந்திரு உருவே
நிலவும் கடல் அலையும் என உவமைப் பெருந் திருவே
அளவில் தனித் தமிழாய்ப் பகையறுக்கும் உளத்திறமே
இலகுதமி ழினிமைக்கென உயிர்ப்பா டிடும் அமுதே!

தண்டமிழ் நலம் புரக்கும் தாளாண் திருவே! பாவலரேறு ஐயா அவர்கட்கு, எளியன் செந்தமிழ் வணக்கங்கள் கூறி வரைவது.

ஐயா! உ.த.மு.க.வின் உயிர்க் கொள்கையடிப்படையில் இந் நாட்டுச் சூழலுக்கு ஏற்ப 'தமிழ் நெறிக் கழகம்' என்ற பெயரான ஓரமைப்பைத் தோற்றுவித்து அதன்வழி; மொழி இனம், சமயம் என்ற முப்பெருந் தமிழினத் தனித்தன்மைகளின் கொள்கை விளக்கச் சுற்றுச் செலவொன்றினை இந்நாட்டுத் தென்மாநிலங்களில் மேற்கொண்டுவிட்டு நடந்த 20-4-84-இல் இல்லந் திரும்பினேன்... எளியேனின் 'தமிழ் நில' அறிமுக விழாச் சொற்பொழிவு 'தமிழ்நிலத்தில்' வெளியிடப்பெறும் என்று மடலில் குறித்துள்ளமை கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். நன்றி வணக்கம்.

தங்களின், உண்மையன்பன்

— அ. பு. திருமாலன், செலாமா, மலேசியா

Scanned with CamScanner

0: 1012 : அன்புகனிந்த அய்யா! வணக்கம்!

உண்மையின் விளக்க மாகி
உயர்தனித் தமிழு மாகி
பண்டையில் புதுமை யாகி
பைந்தமிழ் மீட்சி யாகி
அன்பதின் வடிவ மாகி
அறிவெனும் ஒளியு மாகி
தென்புலங் காக்க வல்ல
தெய்வமாய் வந்தீர் வாழ்க!

தனித்தமிழ் இதழாகிய தென்மொழியில் முதல் முதலாக எனது வெண்பாவினைப் போட்டு என்னைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்திய தங்களுக்கு எனது நன்றி என்றும் நிலைத்தது. என் குழந்தைக்குக் 'குறிஞ்சி மலர்' என்று பெயர் சூட்டிச் சிறப்பித்த பெருமை எனக்கு மிக்க மகிழ்வு நல்குகிறது. எனது குடும்ப வழக்கப்படி குழந்தைக்குப் பெயர் சூட்டுவது என்றால் ஏழு பெயர்களைத் தாளில் எழுதிக் குலுக்கல் முறையால் பெயர் தேர்வு செய்வர். அப்படியே திருமுன், தமிழரசி, தமிழ்ச் செல்வி, கல்யாணி, கலைக்காவிரி, சண்முகப்பிரியா, குறிஞ்சிமலர், இலக்குமி எனும் ஏழு பெயர்கள் பெரியோரால் எழுதிக் குலுக்கல் தேர்வு செய்ததிலும் தாங்கள் சூட்டிய 'குறிஞ்சிமலர்' என்னும் பெயரே தேர்ச்சி பெற்றது. இதன் மூலம் புலவரின் சொல் பொய்க்காது என்றும், தங்களின் மேலான வாய்மைசால் நெறியையும் கண்டுகொண்டேன். மற்றோரும் அறிந்தனர். நீவீர் பல்லாண்டு வாழ்க! தமிழ் வாழ்க! — தாழை. ந. இளவழகன்
மணப்பாறை.

0: 1013 ஐயா, அன்று தொடர்வண்டியில் சென்றபோது தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு, இறைவனுக்கு நன்றி. அருள் ஒளி, அறிவொளி வீசும் தங்கள் முகத்தைக் கண்டதும் தங்களோடு பேசும் ஆவலுற்றேன்: சிறிது நேரமே பேச முடிந்தது; என்றாலும், பெரும் அறிவுக் கடலில் நீந்தியதுபோன்ற மகிழ்ச்சி! தங்களது தமிழ்த்தொண்டுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்களிடமிருந்து கிடைத்த 'தென்மொழியின் தமிழ் ஆழம், என் போன்ற பொதுவான(சாதாரண) பயிலுநர்களுக்கு ஆழம் காண முடியாத பெரும் கடல் போன்றது. என்றாலும், அந்தத் தமிழ்க் கடலினுள் இருக்கும் நல் முத்துகளை நாமும் கண்டு பயன் அடைவோம் என்று ஆவல் எழுந்துள்ளது. அதன் காரணமாகத் தென்மொழியை எங்கள் மன்ற உறுப்பினர்களின், கூட்டத்தில் வைத்தேன். யாவரும் தென்மொழியைப் படித்து அறிவுபெற விரும்புகின்றனர். அன்பு செய்து, எங்கள் மகளிர் மன்றத்திற்குத் தென்மொழியினை அனுப்பித்தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். உறுப்பினர் தொகையினை விரைவில் அனுப்பி வைக்கிறேன். எம் மகளிர் மன்ற உறுப்பினர்களின், முன்னேற்றத் திற்கெனத் திட்டங்கள்ஏதும் இருப்பின் அன்புகூர்ந்து தெரிவிக்கும் படியும் கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்

— சி. இராணி, காவல்கிணறு (நெல்லை)

— தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)

Scanned with CamScanner